அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

EZHUNILAM

மாத இதழ் | மணம் 41 | அக்டோபர் 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055



## பெண்களின் பங்களிப்பு எங்கே?

அரசியலில் பெண்கள் ஓரங்கட்டப்படுவது ஏன்?

## வெளிச்சம்

பெண் வேட்பாளர்களுக்கு இம்முறையும் சந்தர்ப்பமே அளிக்காத பிரதான கட்சிகள்

ராஜபக்சக்களின் பின்வாங்கலும்

ரிஸ்வின் சில்வாவின் நேர்காணலும்



# சரித்திரமானவள் சகாயசீலி

பொழில்

சரித்திரமானவள் சகாயசீலி.
அக்டோபர் மாதம்!
இது
ஈழப் பெண்களுக்கான மாதம்!
தாயக வேள்வித் தீயில்
தன்னை ஆகுதியாக்கிய
முதற் பெண்புலி
மாலதி
மகளிர் நாளை
மாற்றி எழுதிய மாதம்!!

சரித்திரம் ஆகப்போவது அறியாமல்
சமருக்கென வந்தவள் சகாயசீலி!
மாலதியாக
பயிற்சி முகாமிலும்
பாசறை வாழ்விலும்
சிட்டாகப் பறந்து பறந்து
காரியம் முடித்தவள்!

வயதிலும் உருவத்திலும்
சின்னவள் இவள்!
சமராடி விழுப்புண்ணடைந்த
முதற் பெண்புலி!
ஆயினும்.
உயிருடன் பிடிபடாத
புலி வீரர் மரபிற்கேற்ப
கழுத்துக் குப்பியை
கடித்து,
தன்னுயிர் துறக்க
கணமும் தயங்காதவள்!!

இவள் வழி
பல்லாயிரம் பெண்கள்
படையெனத் திரண்டனர்!
களமாடினர்!கரும்புலியாகினர்!
சாகரம் ஏறி
சரித்திரம் படைத்தனர்!!

பூமிப்பந்தின் பெண்குலத்திற்கு
புத்துணர்ச்சியூட்டினர்
பெண்புலிகள்!
பெண் என்னும் வார்த்தைக்கு
புது அர்த்தம் வரைந்தனர்!!

பெரும்படை பலம் கொண்ட
பன்னாட்டு இராணுவமும்
பெண்புலிப் படைகண்டு
பதறிய காலமும் உண்டு!!
அந்த விந்தையைப் புரிந்தவன்
பெண்கள் சரிபாதி சமநீதி
என்று நிகழ்த்திக் காட்டிய
அர்த்த நாரீஸ்வரன்
மேன்மைமிகு தலைவன்
கரிகாலன் என்கின்ற
காவியத் தலைவன்.
இந்த அழியாத வரலாறு
என்றும் நெஞ்சிருக்கும்.

பின்னாளில் பலநூறு
படை நடத்தவும்,
பெரு வெற்றிகள் ஈட்டவும்
ஆரம்பப் புள்ளியாய்
வீழ்ந்தவள் மாலதி!!
அவள் நாளை
பெண்கள் நாளாக
ஈழம் போற்றுகிறது!!

இந்நாளில்
படைகொண்டு பொருதி,
மறைமுகமாய் களமாடி,
கரும்புலியாய் கடற்புலியாய்..
வான்படையாய்
சீறிய பல்லாயிரம்
பெண்புலிகளில்
விதையாக வீழ்ந்த
அத்தனை பெண்களையும்
நினைவில் நிறுத்துகிறோம்!
பூமிப் பந்து உள்ளவரை
உமது ஈகம் வாழும்!!



மாத இதழ் | மணம்: 41
அக்டோபர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| அரசியலில் பெண்கள்... | 06 |
| பெண் வேட்பாளர்களுக்கு... | 11 |
| நாடு முழுவதும்... | 13 |
| இசைப்பிரியா... | 15 |
| வெளிச்சம் (கவிதை)... | 18 |
| ஜே.வி.பி. அரசாங்கமும்.... | 19 |
| ராஜபக்சக்களின்... | 23 |
| தொடாதே.... (கவிதை) | 26 |
| மன்னாரில் உ... | 29 |
| பெண் குழந்தைகள்...... | 32 |
| சொந்தமாக.... | 33 |
| யாழ். மருத்துவமனை.... | 34 |
| உண்மைச் சம்பவம்... | 36 |
| இஸ்ரேல்- ஈரான்... | 37 |
| சக்தி இவள் (கவிதை).... | 40 |
| இடப்பெயர்வும் நானும் (பாகம்; 07)... | 41 |
| வலை (நெடுங்கதை)... | 45 |




## திருக்குறள்

**குறள் 400:**

“கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை’

**விளக்க உரை:**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.



# அகவை 4 இல் காற் தடம் பதிக்கும் எழுநிலம்

## அக்கறை உறவுகள்



எழுநிலம் மணம் 40 வாசித்தேன். எதிர்பார்த்தது போலவே தரமாக இருக்கிறது. அட்டைப் படத்தில் தியாகி திலீபனுடன் காவடி எடுப்பவரின் படம் இருக்கிறது. காவடிப் படத்தை பின் அட்டைக்கு மாற்றி, திலீபனுக்கு முன் அட்டை முழுவதிலும் படம் போட்டிருக்கலாமோ என்று தோன்றுகிறது. இலகு நடையில் புத்திக்கு உறைக்கும் வகையில் ஆசிரியர் தலையங்கம் வருவதும் எழுநிலத்தின் வெற்றிக்கு ஒரு காரணம். கவிதைகள் குறிப்பாக திலீபனைப் பற்றிய கவிதைகள் மனதைத் தொட்டன. மேன்மேலும் பிரகாசித்து வளர எழுநிலம் குழுவினருக்கு எமது வாழ்த்துகள்.

**-புவனேஸ்வரி பரமநாதன்**
**குடும்பத்தினர் ரொறன்ரோ, கனடா.**

மணம் 40 வந்து கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிறது. ஆசிரியர் தலையங்கத்தை இப்போது வாசித்துப் பாருங்கள். நாட்டு நடப்புக்கு அப்படியே பொருந்திப் போகிறது. ஆசிரியரைப் பாராட்ட வேண்டும். எங்களுக்காக தன்னை வருத்தி உயிர்த்தியாகம் செய்த திலீபனைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் தகும். தயவு செய்து அநுரவுக்கு அளவுக்கதிகமான மதிப்புக் கொடுத்து எழுதாதீர்கள். அவரும் குட்டையில் ஊறிய மட்டைதான் அல்லது சிங்கள மக்களுக்கு நல்லது செய்ய நினைக்கும் ஒரு சிங்களத் தலைவன். அவ்வளவுதான்.

**-தேசிகன் ஆரூரன்**
**சிட்னி, அவுஸ்திரேலியா.**

திலீபனின் கவிதைகள் நன்று. சூடுபிடிக்கும் இஸ்ரேல் விவகாரமும் அமெரிக்காவின் நிலைப்பாடும் பற்றி வாசித்து அறிந்துகொண்டேன். பாலகுமாரன் பற்றிய பதிவு மனவருத்தத்தை கொடுத்தது.

பேஜர்களுக்குள் வெடிபொருள் உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கும் செய்திதான். போராடும் இனத்தை அழிக்க எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள்?

**-மதுநிதா தாமஸ்**
**பாரிஸ், பிரான்ஸ்**

குட்டிக்கதைகள், கவிதைகள் அருமை. இடப்பெயர்வு கட்டுரையை விரும்பி வாசிக்கிறேன். நானே அவற்றை அனுபவிப்பது போல வலியைக் கொடுக்கின்றது. வலை கதை நாளுக்கு நாள் திருப்பங்களுடன் அதே சமயம் அந்தந்த சமயத்தை நாட்டு நடப்பை அறியும் விதமாக வருவது சூப்பர்.

எனக்கு அரசியல் கட்சிகள் பற்றி தெரியாது. இருந்தும் கட்டுரைகளை வாசிப்பதால் தெளிவு கிடைக்கிறது. நன்றி.

**-சுகந்தி கணேசன்**
**மடிப்பாக்கம், சென்னை.**

பெரிதாகப் பேசப்படும் காந்தியின் அகிம்சையுடன் ஒப்புவமை இல்லாத திலீபனை ஒப்பிட்டு எழுதிய கட்டுரை சிறப்பு. இனி கொஞ்சக் காலத்துக்கு அநுர அலை அடிக்கப் போகிறது போலத் தெரிகிறது. 'போர்க்குற்றங்கள் விசாரிக்கப்படாது' என்பதிலேயே இந்த நவீன இனவாதியின் சுயரூபம் தெரிந்து விட்டது.

எமது இளையோர் இவன் போன்றவர்களின் பின்னால் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடப்பாடு உண்டு. இனிவரும் தேர்தலில் பதவிக்காக எமது தமிழ்த்தலைமைகள் என்ன குத்துக்கரணம் அடிக்க இருக்கிறார்கள் என்று பார்க்க ஆவலாகவும் அதே சமயத்தில் மனவருத்தமாகவும் இருக்கிறது.

**-றொபேட் நேசுதசன்**
**மான்செஸ்டர், இங்கிலாந்து.**

பெண்களின் பிரச்சனை சார்ந்த ஒரு கட்டுரை வந்திருப்பது நன்று. என்ன? இதையெல்லாமா எழுதுவார்கள் என்று யோசிக்கலாம். பெண்களின் வாழ்க்கையின் பெரும்பகுதி காலத்தில் அனுபவிக்கும் உடலியல் பிரச்சனை பற்றி பேச வேண்டியது அவசியம். ஆனால், கட்டுரை சற்று தெளிவில்லாமல் இருப்பதாகவும் ஒரே விடயம் திரும்பத் திரும்ப சொல்லப்படுவதாகவும் தோன்றுகிறது. கவனியுங்கள். பவானிக்கும் கொற்றவைக்கும் நிதர்சனமான எழுத்துகளுக்காக எமது வாழ்த்துகள்.

**-சித்திரா சுஜிதன்**
**சிங்கப்பூர்.**

திலீபனின் கவிதையொன்றில் அக்கினியை பழமாக உருவகித்தது வித்தியாசமாக இருந்தது. படிப்பினை சார்ந்த குட்டிக் கதை 'புரிதல்' அருமை. யாரோ ஒருவர் சொல்லும் வரை சமயங்களில் நாம் என்ன செய்கிறோம் என்பது எமக்குத் தெரிவதில்லை. நல்ல எழுத்து நடையோடு இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் வரும் பத்திரிகையில் சில சமயங்களில் புரியாத நடையில் கட்டுரைகள் வந்து விடுகின்றன. அதை தவிர்க்கப் பாருங்கள். எனது வாக்கு ஆசிரியர் தலைப்புக்குத்தான். எப்போதும் தெளிந்த நடையில் சுருக்கென்று இருக்கும்.

**-நிதர்சினி சிவகுமார்**
**ஜேர்மனி.**

இந்தத் தேர்தலில் எம்மவர்கள் என்ன கூத்தடிக்கப் போகிறார்களோ என்று கவலையாக இருக்கிறது. கண்டவர்களும் கூட்டுச்சேர்ந்து, எந்த உதவியும் செய்யாமல் இவ்வளவு வாக்குகள் பெற்றது சங்கு. தொடர்ந்தும் சரியானவர்கள் கையில் தங்குமா அல்லது திருடன் கையில் மாட்டுமா? அநுரவின் பின்னால் எமது மக்கள் இழுபடாமல் பார்த்துக் கொள்வதில் நாம் கவனமாய் இருக்க வேண்டும். இதுவும் மக்களை பிரித்தாழும் ஒரு தந்திரம்தான். மக்களுக்கு அது புரியும்போது காலம் கடந்து விடக் கூடாது.

**-சிவசேனன்**
**ஜெகநாதன், இத்தாலி.**



எழுநிலம் சஞ்சிகையின் கடந்த மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின் இணையத்தளத்தில் இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

## ஆசிரியர் பக்கம்

# பெண்களின் பங்களிப்பு எங்கே?

ஒற்றையாட்சியை வலியுறுத்தும் இலங்கைத்தீவில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதில் இருந்து பாராளுமன்ற கதிரைகளை கைப்பற்றும் போட்டி ஆரம்பமாகிவிட்டது. சில இடங்களில், குறிப்பாக யாழில், தம்மைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஒரு தரப்பு குற்றச்சாட்டையும் முன்வைத்திருக்கிறது.

2009 இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர், அவர்கள் வழியிலேயே சென்றுதான் எமக்கான உரிமையை வென்றெடுக்க முடியும், வேறு வழியில்லை என்ற முடிவுடன் எமது மக்களும் வாக்களிக்க தயாராகி விட்டார்கள்.

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதத்தில் 10ம் திகதி யன்று, வீரம் செறிந்த, தியாகம் நிறைந்த, இடர்கள் சுமந்த அனைத்து ஈழப் பெண்களுக்குமான தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் கொண்டாடப்படுகிறது.

முதல் பெண்புலி மாவீரரின் நாள் பெண்களுக்கான எழுச்சி நாளாக தெரிவு செய்யப்பட்டது பொருத்தமானதே. பதினைந்து வருடங்களுக்கு முன்னர் எமது பெண்கள் எவ்வளவு வல்லமையுடனும், தன்னம்பிக்கையுடனும் இருந்தார்கள், சாதனைகள் செய்தார்கள் என்று எண்ணிப் பாருங்கள்.

இப்போது எங்கள் வாக்காளரில் 53% ஆனவர்கள் பெண் களாக இருக்கிறார்கள். தவிரவும் 2009 இனவழிப்பின் பின்னர் பெண் தலைமைத்துவக் குடும்பங்களே அதிகமாக உள்ளனர்.

பொருளாதார நிர்வாகம் பெண்கள் கையில் இருக்கும் போதுதான் பெண்களுக்கான நிதியுதவிகளைப் பெற்று வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியும். அதிகாரத்தில் பெண்கள் இல்லாத ஒரு நிலையில் எந்த வேலைத்திட்டமும் ஒரு கட்டத்திற்கு மேல் போக முடிவ தில்லை என்பது வேதனைக்குரியதே.

இந்த நிலையில், 50% இற்கும் அதிகமானவர்கள் பெண் களாக இருக்கும் இடத்தில் எத்தனை கட்சிகள் தமது வேட் பாளர்களாக பெண்களை முன்னிறுத்தியுள்ளனர்? யாழில் 7 ஆசனங்களுக்கான தேர்தல் போட்டியில் 44 கட்சிகளைச் சேர்ந்த 396 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இவர்க ளில் எத்தனை வீதமானவர்கள் பெண்கள்?

விரல் விட்டு எண்ணக் கூடியளவில் ஒருசில கட்சிகள் பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தாலும் எந்த இடத் திலும் அவர்களை வெற்றி பெற வைத்து பாராளுமன் றிற்கு அனுப்பும் எண்ணம் துளியளவும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களைக் காட்டி தமக்கு வாக்குக ளைச் சேகரிப்பதிலும், எதிரிக்கு வாக்குகள் போகாமல் தடுப்பதிலுமே இந்தக் கட்சிகளின் பழைய பெருச்சாளிகள் கவனமாக இருக்கின்றனர்.


பெண் வேட்பாளர்கள் போட்டியிடும் இடங்களில் வெளி வரும் துண்டுப் பிரசுரங்களையோ சுவரொட்டிகளையோ பாருங்கள். யாராவது இரு ஆண்களின் படங்களை முன் னிறுத்தி, அடுத்ததாக அந்தப் பெண்ணின் படம் இருக்கும். முன்னிறுத்தப்பட்டிருப்பவர்கள் முக்கியமானவர்கள் என்று மக்களும் அவர்களுக்கு வாக்கைப் போட்டுவிடு வார்கள்.

இந்த நிலைமை தொடர்வதால்தான், பெண்களில் அநே கர் நாட்கூலியாக வேலைசெய்து குடும்பத்தை கொண் டிழுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். இதுவரை காலமும் கதிரைக்கு பாரமாக பாராளுமன்றம் சென்ற எந்தப் பழைய பெருச்சாளியும் சலுகைகளைப் பயன்படுத்தி பெண்களின் வாழ்வை மேம்படுத்த முன்வர வில்லை. 'பார் லைசென்ஸ்' வாங்குவதிலும் வாகனங்களை இறக்குவதிலும் இருந்த அக்கறை வேலைத்திட்டங்களை உருவாக்கி முன்னெடுப்பதில் இருந்திருந்தால், பெண்கள் முன்னேற்றம் அடைந்திருப்பார்கள். சமுதாயம் முன்னே றியிருக்கும்.

ஊழலும், தில்லுமுல்லும் நிறைந்த, தனக்கென சொத்துக் குவிக்கும், அதிகார துஷ்பிரயோகம் செய்யும் இவர்களை தூக்கியெறிய வேண்டாமா?

ஒரு துருக்கிய பழமொழி உண்டு: காடுகளில் உள்ள மரங் கள் அழிந்துகொண்டே வந்தன. ஆனால் மரங்கள் மீண்டும் மீண்டும் கோடரிக்கே வாக்களித்தன - மரத்தினால் ஆன கைபிடியைக் காட்டி, 'நானும் உங்களில் ஒருவன்தான்' என கோடரி ஏமாற்றியதை முழுமையாக நம்பின மனதார நம்பின .- எங்கள் மக்களைப்போல.

இப்போது பெண்கள் விழித்துக்கொள்ள வேண்டும். எமக்குரிய உரிமைகளை தட்டியும் அதட்டியும் கேட்க முன்வந்தால் மட்டுமே பெண்களுக்கான உரிமை கிடைக் கும். அவர்கள் கொடுக்க மறுத்தால் என்ன? பொறுப் புகளை எடுத்துக் கொள்ளுங்கள், பெண்களுக்கான சங்கங்களை நிறுவுங்கள், முக்கியமாக துணிந்து நில்லுங் கள். சுயேச்சையாகவேனும் நின்று அதிகாரத்துக்கு வர வேண்டும். எங்களின் வேலைத்திறன் எங்களுக்கான வாக்கு வங்கியை கொண்டுவரும். நீங்களாக முன்வந்தால் சமூக மாற்றம் சாத்தியமே.




# அரசியலில் பெண்கள் ஓரங்கட்டப்படுவது ஏன்?



இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி நடந்து முடிந்தது. ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க வெற்றிபெற்று ஜனாதிபதியாகியுள்ளார் . இந்த ஜனாதிபதித் தேர்தலில் 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில் ஒருவர் மரணமடைந்ததால் 39 பேர் மாத்திரமே போட்டியிட்டனர்.

இலங்கை வரலாற்றில் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிட்ட ஜனாதிபதி தேர்தல் என்ற சாதனை பதிவானபோதும் பெண் வேட்பாளர்கள் எவரும் இல்லாத ஜனாதிபதித் தேர்தல் என்ற மோசமான நிலையையும் இந்த தேர்தல் பதிவு செய்தது. இவ்வாறான நிலையில் தான் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம்

**இலங்கையை பொறுத்தவரை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணிகள் பலவுள்ளன. இலங்கைப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்தும் தடைகளை சமூக மற்றும் கலாசார, அரசியல், பொருளாதார, தனிப்பட்ட மற்றும் உளவியல் ரீதியாக அவற்றை வகைப்படுத்தி காட்டமுடியும். சமூக முறைமை, அதனோடிணைந்த சம்பிரதாய மனப்பாங்கு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கள், ஆண் – பெண் சமூக பிரதிநிதி த்துவ செயற்பாடுகளின் மாற்றம், பெண்களுக்கு பொது செயற்பாடுகள் தொடர்பில் காணப்படும் குறைவான அனுபவம் மற்றும் பயிற்சி, மகப்பேற்று பொறுப்பு மற்றும் சம்பிரதாயமாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப பொறுப்புகள், குறைவான சுதந்திரம், குறைவான வாய்ப்புகள் மற்றும் சமூக மற்றும் கலாசார தடைகள் என்பன இதில் ஆதிக்கம் செலுத்துகின்றன.**



திகதி நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் மக்களின் வாக்குகள் மூலம் 196 பாராளுமன்ற உறுப்பினர்களையும் தேசியப் பட்டியல் மூலம் 29 உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்கான பாராளுமன்றத் தேர்தல் இடம் பெறவுள்ள நிலையில் அதற்கான வேட்புமனுத் தாக்கலும் முடிவடைந்துள்ளது.

இதற்கமைய 196 பாராளுமன்ற ஆசனங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களிலும் 8388 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர். இலங்கை பாராளுமன்ற தேர்தல் வரலாற்றில் அதிகூடிய வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாக இந்த தேர்தலும் வரலாற்றுப் பதிவைப் பெற்றுள்ளதுடன் வழக்கம் போலவே குறைந்தளவான பெண் வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தல் என்ற மோசமான பதிவும் தொடர்கின்றது .

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 52 சதவீதம் பெண்களாக இருந்தும், நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 5 சதவீதத்திற்கும் குறைவான பெண்களே வேட்பாளர்களாக போட்டியிடுகிறார்கள். இதனால் அரசியலில் நேரெதிர் துருவங்களாக இருக்கும் கட்சிகள் அனைத்துமே, பெண்களுக்கு தேர்தலில் குறைவாக வாய்ப்பளிப்பதில் ஒன்றுபட்டு செயற்படுவதாக பெண்ணிய செயற்பாட்டாளர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளானாலும் சரி, வடக்கு கிழக்கில் போட்டியிடும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளானாலும் சரி, மலையகக் கட்சிகளானாலும் சரி, மிகக்குறைந்த அளவான பெண் வேட்பாளர்களுக்கே இந்த தேர்தலில் போட்டியிட வாய்ப்பளித்துள்ளனர். 29 பேரைக் கொண்ட தமது தேசியப்பட்டியல் நியமன பெயர்களிலும் ஒருவர் அல்லது இருவரை மட்டுமே பெண்களாக இணைத்துள்ளனர்,

1960 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது பெண் பிரதமரை இலங்கை உருவாக்கிய போதிலும் அதன் பின்னரான பாராளுமன்றத்தில் 13 க்கும் குறைவான பெண்களையே காணக்கிடைத்தது. கடந்த 2015 பாராளுமன்றத் தேர்தலில் 6,151 பேர் போட்டியிட்டனர். அதில் 556 பெண் வேட்பாளர்கள். அதாவது மொத்த வேட்பாளர்களில் 9.2 வீதம் பெண்கள். ஆனால் 2020 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் 7452 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அதில் 819 பேர் மட்டுமே பெண்கள். அதாவது மொத்த வேட்பாளர்களில் 8.19 வீதம் மட்டுமே.



அதிலும் பிரதான கட்சிகளான ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி - 17, ஐக்கிய தேசியக் கட்சி - 15, ஐக்கிய மக்கள் சக்தி (சஜித்) - 14, தேசிய மக்கள் சக்தி (ஜே.விபி) - 22, தமிழ் தேசிய கூட்டமைப்பு - 6, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1 என்ற வகையில் பிரதான கட்சிகள் 75 பெண் வேட்பாளர்களையே களமிறக்கின . இவர்களில் தேசியப் பட்டியல்




உறுப்பினர் உட்பட 12 பேர் மாத்திரமே பாராளுமன்றம் சென்றனர். சிறுபான்மை இனங்களில் இருந்து எவருமே தெரிவு செய்யப்படவில்லை. இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலும் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளும் வலியுறுத்தல்களும் அதிகரித்துள்ள போதும் அரசியல் கட்சிகளினதும் அரசியல் தலைவர்களினதும் மக்களினதும் மன நிலையில் மாற்றங்கள் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு வேண்டும் என தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், பெரும்பாலான கட்சிகளில் பெண்களுக்கு மகளிர் அணியில் மட்டும்தான் பொறுப்புகள் வழங்கப்படுகின்றனவே தவிர கட்சியின் பொதுக் குழு, செயற்குழு போன்றவற்றில் பெண்களுக்கு முக்கியப் பொறுப்புகள் வழங்கப்படுவதில்லை.

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 52 சதவீதம் பெண்களாகவுள்ள நிலையில் பாராளுமன்றத்தில் 4.4 சதவீதமும், மாகாண சபைகளில் 4 சதவீதமும், உள்ளூராட்சி சபைகளில் 1.9 சதவீதமுமாகத்தான் பெண்களின் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. இலங்கையில் சர்வஜன வாக்குரிமை 1931ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டபோது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம காலத்திலேயே அது வழங்கப்பட்டாலும் அரசியலில் பெண்களுக்கு சம அந்தஸ்து கொடுக்க ஆண்களும் சமூகமும் இன்னும் தயாரில்லாத நிலையே தொடர்கின்றது.

1931 ஆம் ஆண்டு இலங்கையில் டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் போதே பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. 1927 இல் டொனமூர் விசாரணைக் குழு இலங்கையில் விசாரணைகளை ஆரம்பித்தபோது பெண்கள் வாக்குரிமைச் சங்கம் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கையை முன் வைத்த போது அன்றைய அரசியலில் முன்னணித் தலைவர்களாக இருந்த ஆண்கள் பலர் அதை பகிரங்கமாக எதிர்த்தார்கள். பெண்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என்று பேசினார்கள். கூட்டங்களில் உரையாற்றினார்கள். பத்திரிகைகளில் எழுதினார்கள் .

இதையெல்லாம் எதிர்கொண்டு கடுமையாகப் போராடித் தான் பெண்கள் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக் கொண்டார்கள். ஆங்கிலேய குடியேற்ற நாடுகளில் முதன் முதலாக பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட நாடு இலங்கை. அப்போது ஐரோப்பாவில் கூட பல நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கையில் செயல் வலுவிலுள்ள சட்டத்திற்கமைய பெண்களுக்கும், ஆண்களுக்குச் சமமான சந்தர்ப்பம் மற்றும் உரிமைகள் காணப்படுகின்ற போதிலும் நடைமுறையில் பெண்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். ஆணாதிக்க சமூகத்தினுள் ஆணாதிக்க சிந்தனை மற்றும் தீர்மானங்களுக்கிடையில் பெண்களுக்குக் கிடைக்க வேண்டிய இடம் கிடைக்காமையே அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் கீழ் மட்டத்திலிருக்க காரணம் என்ற குற்றச்சாட்டு பெண்ணிய செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்பினர், பெண் உரிமைகளை மதிப்பவர்களினால் முன் வைக்கப்படுகின்றது.

இதனை நிரூபிக்கும் வகையிலேயே 1947 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான பாராளுமன்றத் தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 13 ஐ ஒருபோதும் தாண்டவில்லை. 1947ஆம் ஆண்டு 3, 1952ஆம் ஆண்டு 2, 1956ஆம் ஆண்டு 4, 1960 (மார்ச்) 3, 1960 (ஜூலை) 3, 1965ஆம் ஆண்டு 6, 1970ஆம் ஆண்டு 6, 1977ஆம் ஆண்டு 11, 1989ஆம் ஆண்டு 13, 1994ஆம் ஆண்டு 12, 2000 ஆம் ஆண்டு 9, 2001ஆம் ஆண்டு 10, 2004 ஆம் ஆண்டு 13, 2010 ஆம் ஆண்டு 13, 2015 ஆம் ஆண்டு 12, 2020 ஆம் ஆண்டு 12 என்ற கணக்கிலேயே பெண்களின் பிரதிநிதித்துவம் இருந்தது. அதிலும் இடைநடுவில் ஒரு பெண் எம்.பி.யின் பதவி நீதிமன்றத்தினால் பறிக்கப்பட்டதனால் 11 பெண்கள் மட்டுமே பிரதிநிதித்துவப் படுத்தினர்.

1980 க்குப் பின்னர் 2000 ஆம் ஆண்டு, 2020 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல்களில் மாத்திரம் தான் தமிழ் பெண்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாகவில்லை. மற்றும்படி தொடர்ச்சியாக தமிழ்ப் பெண்கள் தெரிவாகி வந்தனர். அதேபோன்று இலங்கையின் வரலாற்றில் முஸ்லிம் பெண்களைப் பொறுத்தவரையில் 2001 முதல் 2010 வரையில் பேரியல் அஷ்ரப், அஞ்ஞான் உம்மா ஆகியோர் தெரிவானதைத் தவிர வேறெந்த முஸ்லிம் பெண்களும் பாராளுமன்றத்துக்கு தெரிவானதில்லை.அந்த நிலை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் தொடரும் வாய்ப்புக்களே அதிகம் உள்ளன .

இலங்கையை பொறுத்தவரை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணிகள் பலவுள்ளன. இலங்கைப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில்



தாக்கம் செலுத்தும் தடைகளை சமூக மற்றும் கலாசார, அரசியல், பொருளாதார, தனிப்பட்ட மற்றும் உளவியல் ரீதியாக அவற்றை வகைப்படுத்தி காட்டமுடியும். சமூக முறைமை, அதனோடிணைந்த சம்பிரதாய மனப்பாங்கு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புக்கள், ஆண் -பெண் சமூக பிரதிநிதித்துவ செயற்பாடுகளின் மாற்றம், பெண்களுக்கு பொது செயற்பாடுகள் தொடர்பில் காணப்படும் குறைவான அனுபவம் மற்றும் பயிற்சி, மகப்பேற்று பொறுப்பு மற்றும் சம்பிரதாயமாக பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப பொறுப்புகள், குறைவான சுதந்திரம், குறைவான வாய்ப்புகள் மற்றும் சமூக மற்றும் கலாசார தடைகள் என்பன இதில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அரசியல்வாதிகள் தொடர்பாக சமூகத்தில் நிலவும் கருத்துக்கள் பெண்கள் அரசியலிற்குள் நுழைவதற்கு பெரும் தடைக்கல்லாக உள்ளன. அத்துடன் பெண்களைப் பற்றி ஒழுக்கமாக பேசுவதற்கான ஒரு இடமாக இலங்கை அரசியல் களம் காணப்படவில்லை. இலங்கையில் வாழும் பெண்கள் அரசியல் விழிப்புணர்வைக் கொண்டுள்ளனர், ஆனால் இவர்கள் அரசியலிற்குள் நுழைவதற்குத் தயக்கம் காண்பிக்கின்றனர். ஏனெனில் அரசியல்வாதிகள் தொடர்பாக சமூகத்தில் நிலவும் கருத்துக்களே பெண்கள் அரசியலிற்குள் நுழைவதில் தயக்கம் காண்பிப்பதற்கான பிரதான காரணியாகும். அரசியல் பரப்புரைகள் பொதுவாக ஆண்களால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் இந்தப் பரப்புரைகளில் அத்துமீறிய செயல்கள் மேற்கொள்ளப் படுவதுடன், மதுபான விநியோகங்கள் மற்றும் கைகலப்புக்கள் போன்ற தீய செயல்களும் இடம்பெறுவதால் இங்கு ஒழுக்கமான ஆண்மகன் கூட பெண்களைப் பற்றி ஒழுக்கமாக பேசுவதற்கான ஒரு இடமாக இலங்கை அரசியல் காணப்படவில்லை.

இதேவேளையில், பெரும்பாலான அரசியற் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தயாரில்லை. ஆண் பிரதிநிதிகளை வேட்பாளர்களாக நியமிப்பதன் மூலமே எதிரணிகளின் அடிதடி அரசியலையும் பண பல அரசியலையும் ஆபாச, அசிங்க அரசியல் பிரசாரங்களையும் எதிர்கொள்ள முடியுமெனக் கருதுவதாலேயே பெண் வேட்பாளர்களை ஓரங்கட்டுகின்றன.

அதுமட்டுமன்றி சமூக அமைப்பானது பெண்களின் பங்கேற்பை குறைத்து விடுகிறது. நிதி ஆதாரம், 'பணியிடத்து பொறுப்புகள்' மற்றும் பண்பாட்டு ரீதியான தடைகள் என்பனவற்றுடன் அரசியல் ரீதியாக பெண்ணே இன்னொரு பெண்ணின் ஆதரவை திரட்டுவதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. பெண்களுக்கு எதிரான வன்முறைகளே அவர்களின் அரசியல் பங்களிப்பை தடுக்கும் முக்கிய காரணியாக இருப்பதாக இலங்கை பாலின அடிப்படையிலான வன்முறை எதிர்ப்பு அமைப்பு கூறுகின்றது. துன்புறுத்தல், பாலியல் லஞ்சம், மிரட்டுதல், உடல் ரீதியாக தாக்கப்படுதல், எச்சரிக்கைகள், நிதி ரீதியான அழுத்தங்கள், எச்சரிக்கைகள், பண்பற்ற முறையிலான ஊடக தகவல்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் சேறு பூசப்படுதல் போன்றவை இந்த அமைப்பினால் பெண்களுக்கு எதிரான வன்முறைகளாக சுட்டிக் காட்டப்படுகின்றன.

தற்போதைய இலங்கையின் நிலைமையின் கீழ் அரசியல் பிரதிநிதியாதல் என்பது விரைவாக பணக்காரர் ஆவதற்கான கவர்ச்சிகரமான பதவியாக

> **பெரும்பாலான அரசியற் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தயாரில்லை. ஆண் பிரதிநிதிகளை வேட்பாளர்களாக நியமிப்பதன் மூலமே எதிரணிகளின் அடிதடி அரசியலையும் பண பல அரசியலையும் ஆபாச, அசிங்க அரசியல் பிரசாரங்களையும் எதிர்கொள்ள முடியுமெனக் கருதுவதாலேயே பெண் வேட்பாளர்களை ஓரங்கட்டுகின்றன.**





பலர் கருதுகின்றனர். இதனால், இதற்காக விஷேடமாக ஆண்களுக்கிடையில் காணப்படும் அதிகரித்த போட்டி பெண்களின் பிரதிநிதித்துவத்தில் காணப்படும் மற்றுமொரு தடையாக உள்ளது. பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவதற்கு பொருளாதார சாதனங்களும் தாக்கம் செலுத்துகின்றன.

தொழிலின்மை, வறுமை மற்றும் பெறுகின்ற வருமானம் குடும்பத்தை கொண்டு செல்வதற்கு போதாமையால் ஆண்களை விட கூடுதலாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான நிலைமையில் அரசியல் போன்ற பொதுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலும் பார்க்க பெரும்பாலான பெண்கள் குடும்பத்தைக் கொண்டு செல்வதற்காக வாழ்கையை தியாகம் செய்ய வேண்டியுள்ளது.

ஏதேனும் சொத்துக்கள் உள்ள பெண்கள் கூட ஆண்களைப் போல் அச் சொத்துக்கள் தொடர்பில் சுயாதீனமான தீர்மானங்களை எடுத்து அதனை தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக செலவு செய்வதற்குள்ள வாய்ப்பு பெண்களுக்கு மிகவும் குறைவாகும். மனித சமூகம் ஆண், பெண் எனும் இரு தரப்பினரைக் கொண்டதுடன் மத ரீதியிலும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரிவுகளில் வீரியமாக காணப்படும் பழமைவாதம் இனம், மொழித்தன்மை, பாரம்பரிய கலாசாரம், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்ற பல்வேறு விடயங்களும் பெண்களின் அரசியல் பிரதி நிதித்துவத்துக்குத் தடை போடுகின்றன. அதன்படி, இந்து ,கிறிஸ்தவ, இஸ்லாமிய மத ரீதியான மரபுகள் என மூன்று வகையில் மத ரீதியான மரபுப் பழக்க வழக்கங்கள் மக்களால் காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றன. இதற்கமைய ஒவ்வொரு மதமும் தம்மளவிலான மரபுகளைப் பின்பற்றி வருகின்றன.

மேற்குறிப்பிட்ட மூன்று சமயங்களிலும் பெண்களுக்கு எதிரான பல்வேறு கட்டுப்பாடுகளும் கலாசார முறைகளும் எடுத்துக் கூறப்பட்டு பெண்களை அரசியல் ரீதியான செயற்பாடுகளில் பங்கு கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளி விடுகின்றன. அத்துடன் பெண்களினால் பெரிதாக என்ன செய்து விட முடியுமென்ற ஆணாதிக்க சிந்தனையும் பெண்களை கட்டிப் போடுகின்றன. இலங்கை அரசியல் அமைப்பு, ஆண்-பெண் பாகுபாடற்ற சமத்துவத்தை உறுதி செய்கிறது என்றாலும், நடைமுறையில் அத்தகைய சமத்துவம் உறுதிப்படவில்லை என்பதே உண்மை.

நாட்டில் காணப்படும் தேர்தல் கட்டமைப்பின் கீழ் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக பாராளுமன்ற மற்றும் மாகாணசபை மட்டத்தில் பெண்களுக்கு 30 முதல் 70 வீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் முன்மொழிவொன்றை தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் மறுசீரமைப்புக் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றக் குழுவில் எழுத்து மூலம் பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் சமர்ப்பித்திருந்தது.

இதற்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 25 வீதம் பெண்களுக்கு வழங்கப்படுவதை 30 வீதமாக அதிகரிப்பது தொடர்பான முன்மொழிவும், சகல அரசியல் கட்சிகளும் தமது தேசியப் பட்டியலில் 50வீதம் பெண்களுக்கு ஒதுக்குவதை தேர்தல் சட்டங்களில் உள்ளடக்குவது குறித்த முன்மொழிவும் பாராளுமன்ற விசேட குழுவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் இவை பின்பற்றப்படவில்லை.

இலங்கை சனத்தொகையில் 52 வீதமாகவுள்ள பெண்களே தேர்தல்களில் வெற்றி - தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளபோதும் தமது பலம் தெரியாதவர்களாகவே இன்றுவரை இவர்கள் உள்ளனர். இதனால்தான் பெண்களின் அரசியல் பிரதிநித்துவத்தை அதிகரிப்பதற்கான பெண்கள் அமைப்புகளின் தொடர்ச்சியான போராட்டம் தொடர்ந்தும் நிகழ்ந்துகொண்டு இருக்கிறது. 'அவளுக்கும் ஒரு வாக்கு' என எத்தனையோ விழிப்புணர்வுத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும், அரசியல் கட்சிகளினதும் நோக்கமும் மக்களினது மன நிலையும் முற்றிலும் மாறுபட்டதாகவே தொடர்கின்றது.








சு.நிஷாந்தன்

# பெண் வேட்பாளர்களுக்கு இம்முறையும் சந்தர்ப்பமே அளிக்காத பிரதான கட்சிகள்

பொதுத் தேர்தலில் நான்கு பிரதான கட்சிகளிலும் பெண் வேட்பாளர்களுக்கு மிகவும் குறைவாகவே வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளமை வேட்பாளர் பட்டியல்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் தெரியவந்துள்ளது.

பொதுத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், பிரதானக் கட்சிகளான தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, புதிய ஜனநாயக முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியன தமது தீவிர பிரசாரத்தை ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில், நாட்டில் கடந்த 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய அரசியல் புரட்சிகள் நாட்டு மக்கள் மத்தியில்






உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டத்தை போன்று பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென சிவில் அமைப்புகளும், மக்களும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

கடுமையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியதன் விளைவாகதான் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றியதாக அரசியல் ஆய் வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், அந்த அரசியல் புரட்சிக்கு ஏற்ப தேசிய மக்கள் சக்தி மாத்திரமல்ல எந்தவொரு பிரதான அரசியல் கட்சியிலும் பெண் வேட்பாளர்களுக்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இந்த நான்கு கட்சிகளிலும் 1,019 பேர் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுகின்றனர். தேசிய பட்டியல் ஊடாக 29 பேர் தெரிவுசெய்யப்பட உள்ளனர்.

வேட்பாளர் பட்டியலில் 85 பேர் மாத்திரமே பெண் வேட்பாளர்களாக உள்ளனர். இது 8 வீதமான ஒதுக்கீடாகும். அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தப்பட்டசமாக ஒரு பெண் வேட்பாளரையாவது நிறுத்தியுள்ள கட்சியாக தேசிய மக்கள் சக்தி உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 13 மாவட்டங்களில் ஒரு பெண் வேட்பாளரை குறைந்தப்பட்சமாக நிறுத்தியுள்ளது.


புதிய ஜனநாயக முன்னணி 11 மாட்டங்களிலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 5 மாவட்டங்களிலும் குறைந்தபட்சம் ஒரு பெண் வேட்பாளரை நிறுத்தியுள்ளது. இவற்றில் நான்கு மாவட்டங்களில் பெண் தலைமைகளும் உள்ளன. கொழும்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் தேசிய மக்கள் சக்தி போட்டியிடுகிறது.

இரத்தனபுரி மாவட்டத்தில் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் புதிய ஜனநாயக முன்னணி போட்டியிடுவதுடன், புத்தளத்தில் சட்டத்தரணி சமரி பிரியங்கா மற்றும் வன்னியில் அமரசேகர லியனாராச்சிகே துஷாரி தலைமையில் பொதுஜன பெரமுன போட்டியிடுகிறது.

அதிகபட்சமாக 32 பெண் வேட்பாளர்களுக்கு தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தி 14 பேருக்கும் வாய்ப்புகளை வழங்கியுள்ளன. கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 25 வீதமான பெண் வேட்பாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், அந்த நடைமுறையை நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் பின்பற்றவில்லை.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டத்தை போன்று பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சட்டங்களும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென சிவில் அமைப்புகளும், மக்களும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.





# நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்தியில்



# களமிறங்கியுள்ள 31 பெண் வேட்பாளர்கள்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒன்பது மாகாணங்களிலும் 31 பெண் வேட்பாளர்களை களமிறக்கியுள்ள தேசிய மக்கள் சக்தி தேசிய பட்டியலிலும் நான்கு பெண்களின் பெயர்களை பரிந்துரை செய்துள்ளது. இலங்கை அரசியலில் பாலின சமத்துவம் என்பது கேள்விக் குறியாகியுள்ள நிலையில் தேசிய மக்கள் சக்தியின் இந்த செயற்பாடு நாடு முழுவதிலும் உள்ள பெண்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதில் விசேடமான அம்சம் என்னவெனில் பலர் எந்த வித அரசியல் பின்புலமும் இல்லாது தேசிய மக்கள் சக்தியில் நேரடியாக இணைந்து கொண்டவர்களாக உள்ளனர். அதிகமான பெண்கள் சட்டத்தரணிகளாகவும் கல்வியியலாளர்களாவும் உள்ளனர். ஜனாதிபதி தேர்தலின் போது தனது பிரசாரத்தில் தேசிய மக்கள் சக்தியானது, தாம் ஆட்சியமைத்தால் பெண்களுக்கு அரசியலில் சமவாய்ப்பை வழங்குவோம் என மக்கள் மத்தியில் வாக்குறுதியை வழங்கியிருந்தது. அதில் பிரதானமாக, பெண் ஒருவரையே நாம் பிரதமராக நியமிப்போம் என்ற வாக்குறுதியும் அடங்கும்.

ஏனென்றால் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளர்களாக களமிறங்கிய 38 பேரும் ஆண்களாகவே இருந்தனர். இறுதியாக 2019 ஆம் ஆண்டே பெண் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியிருந்தார். (அஜந்தா பெரேரா)

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தேசிய மக்கள்



சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய கல்வியியலாளர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை பிரதமராக்கினார். இவர் இலங்கையின் மூன்றாகவது பெண் பிரதமராக விளங்குகின்றார்.

இதற்கு முன்னதாக சிறிமா பண்டாரநாயக்க இலங்கையில் மாத்திரமல்லாது உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவர். இரண்டாவதாக அவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க பிரதமராக விளங்கினார். ஹரிணி அமரசூரிய அநுரவின் வெற்றிக்கு பெரும் பங்களிப்பை வழங்கியவர்.

எந்த அரசியல் பின்புலமும் இல்லாத அவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை தலைவராகவும் விரிவுரையாளராகவும் விளங்கியவர். ஹரிணி அமரசூரிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டதை நாட்டின் பெண்வர்க்கத்தினர் வரவேற்றுள்ளனர். காரணம் அவர் கல்வித்துறை சார்ந்த ஒருவராக விளங்குகிறார்.

இதையடுத்து பாராளுமன்றத் தேர்தல்களிலும் துறை சார்ந்த பெண்களை களமிறக்குவதில் தேசிய மக்கள் சக்தி மும்முரமாக ஈடுபட்டது. அதன் படி நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தனது பட்டியலில் பெண்களை தெரிவு செய்துள்ளது தேசிய மக்கள் சக்தி.

### மேல் மாகாணம்

கொழும்பு மாவட்டத்தில் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சமன்மலி குணசிங்க, ராய் கெளி பல்தசரர், கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, சட்டத்தரணி சாமனி குணசேகர ஆகியோரும், கம்பஹா மாவட்டத்தில் ஹேமாலி வீரசேகர சாமரிகா ஜயசிங்கவும், களுத்துறை மாவட்டத்தில் சட்டத்தரணி நிலாந்தி கோட்டஹாச்சி ,ஒஷானி உமங்கா ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

### மத்திய மாகாணம்

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் சட்டத்தரணி துஷாரி ஜயசிங்க, குமுதினி அபேகுணவர்தனவும் மாத்தளை மாவட்டத்தில் தீப்தி நிரஞ்சனி வாசலகே மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் செல்வி கலைச்செல்வி, சட்டத்தரணி தர்ஷனி திலகரத்ன ஆகியோரும் போட்டியிடுகின்றனர்.

### தென்மாகாணம்

தென்மாகாணத்தின் காலி மாவட்டத்தில் அனுஷா நிமாலி சருக்காலி சட்டத்தரணி ஹசாரா நயனதாரா , மாத்தளை மாவட்டத்தில் சரோஜா சாவித்ரி போல்ராஜ், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரலதா கருணாரத்ன ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### கிழக்கு மாகாணம்

திகாமடுல்ல மாவட்டத்தில் முத்துமணிகே ரத்வத்தே, மட்டக்களப்பு மாவட்டத்தில் செல்லப் பெருமாள் வனிதா, திருகோணமலை மாவட்டத்தில் ஷீலாகருணா நாயக்க ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### வடமத்திய மாகாணம்

அனுராதபுரம் மாவட்டத்தில் லெப்டினட் உதேனிகா சஞ்சீனி விஜேவந்த

### சப்ரகமுவ மாகாணம்

கேகாலை மாவட்டத்தில் சட்டத்தரணி சகாரிகா கங்கானி அதாவுத மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் சட்டத்தரணி நிலுஷா லக்மாலி கமகே.

### ஊவா மாகாணம்

பதுளை மாவட்டத்தில் சட்டத்தரணி உபக்சா விஜேதுங்க, அம்பிகா சாமிவேல், மொனராகலை மாவட்டத்தில் சதுரி கங்கானி

### வடமேல் மாகாணம்

குருநாகல் மாவட்டத்தில் சமிலா பிரசாதினி ரத்னவர்தன, சட்டத்தரணி கீதா ரத்னகுமாரி ஹேரத், புத்தளம் மாவட்டத்தில் சட்டத்தரணி ஹிருணி விஜேசிங்க.

### வட மாகாணம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெண்ணிலா ரோசலிங்கம், வன்னி மாவட்டத்தில் பாத்திமா ஹாஜிஸ்தா.

### தேசிய பட்டியல்

இதே வேளை தேசிய பட்டியலில் நான்கு பெண்கள் இடம்பெற்றுள்ளனர். பேராசிரியர் வசந்தா சுபசிங்க, சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர, சமிலா குமுது பீரிஸ், பெனிதா பிரிஷாந்தி ஹெட்டிதந்ரி ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

இப்பட்டியலில் 11 சட்டத்தரணிகள் இடம் பெற்றுள்ளமை முக்கியமான விடயம். ஏனைய தேசிய கட்சிகளும் கூட்டணி கட்சிகளும் பெண்களுக்கு பெரிதாக இடம் வழங்காத நிலையில் தேசிய மக்கள் சக்தி சகல மாவட்டங்களிலும் பெண்களை நிறுத்தியுள்ளது. 1931 ஆம் ஆண்டிலிருந்து இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல் வரை பார்க்கும் போது 60 பெண்கள் மாத்திரமே இலங்கை பாராளுமன்றத்தை அலங்கரித்துள்ளனர். மேலும் கடந்த மூன்று பாராளுமன்றங்களிலும் 13 பெண் பாராளுமன்ற உறுப்பினர்களே இருந்துள்ளனர்.

இது மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் வெறும் 5.7 வீதம் மாத்திரமே. உலகில் பெண்களை தலைவர்களாக கொண்ட நாடுகள் இருபதுக்கும் அதிகமாகவுள்ளன. குறித்த நாடுகளில் மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமானோர் பெண்களாக உள்ளனர்.

ஆனால் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான பெண் சனத்தொகை விகிதாசாரத்தை கொண்டிருக்கும் இலங்கையில் இந்நிலைமை தலைகீழாக உள்ளது. எனினும் இலங்கை அரசியலில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# இசைப்பிரியா – மன்னம்பெரி;



நவீனன்

# மன்னம் பெரிக்கு ஒரு நீதி இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா?

## அநுரவின் புதிய அரசு நீதி வழங்குமா?

தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு நீதியை வழங்குமா என்பது கேள்விக்குறியே? மன்னம்பெரிக்கு ஒரு நீதியும், இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா என்பதும் இனவாதத்தின் அடிப்படைக் காரணங்களாகவே அமைகின்றன.





நீண்டகால விசாரணைகளின் பின்னர் கதிர்காமத்தில் கொல்லப்பட்ட அழகுராணி மன்னம்பெரிக்கு நீதி வழங்கப்பட்டது. அவரைக் கொன்ற படையினர் விசாரிக்கப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டனர். ஆனால் இளம் தமிழ் ஊடகர் இசைப்பிரியாவை கொன்றவர்கள் ஒருபோதும் விசாரிக்கப்படவும் இல்லை. தண்டிக்கப்படவும் இல்லை. எதிர் காலத்தில் தண்டிக்கப்படவும் சாத்தியமில்லை என்றே பதவிக்கு வந்த புதிய ஜனாதிபதி அநுர திசநாயக்கா திட்டவட்டமாக தேர்தலுக்கு முன்பாக தெரிவித்து விட்டார்.

## போர்க் குற்றங்கள் விசாரிக்கப்படாது?

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் விசாரிக்கப்படாது என்று தெளிவாகவே அவர் தேர்தலுக்கு முன்பாக தெரிவித்து விட்டார்.

ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் கொல்லப்பட்ட இசைப்பிரியாவுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை. இலங்கை அரசு ஒருபோதும் நீதி வழங்கப்போவதும் இல்லை என்பது தமிழர்க்கு மட்டுமின்றி சர்வதேசத்திற்கும் தெரியும்.

இசைப்பிரியா தமிழ் இனத்தைச் சேர்ந்த இளம் ஊடகர். மற்றையவர் சிங்கள இனத்தைச் சேர்ந்த அழகுராணியான மன்னம்பெரி. இருவரும் கொல்லப்படும் போது இளம் பெண்கள். இருவரும் இலங்கைத் தீவில் உள்ள ஈழத்திலும் - சிறிலங்காவிலும் பிறந்தவர்கள்.

கதிர்காமத்தின் அழகி பிரேமாவதி மன்னம்பெரி என்ற பெண்ணை இலங்கை இராணுவம் நிர்வாணம் ஆக்கி வீதி வழியே இழுத்து வந்து ஏப்ரல் 16, 1971 அன்று தெருவில் வைத்து துப்பாக்கியினால் சுட்டு கொலை செய்தது.

இசைப்பிரியா ஈழப் போராட்டத்தில் இளம் ஊடகராக பணியாற்றியவர்.

மௌனிக்கப்பட்ட ஈழப்போரின் இறுதியில் 2009 மேயில் சரணடைந்த பின்பு அரச படையால் கொடூரமாகக் கொல்லப்பட்டார். நிராயுதபாணியாக இருந்த பல பெண்களை பயங்கரவாதிகள் என்றும் அவர்களை கொல்வது நியாயமே என்றும் சிங்கள அரசு இன்றும் வாதிடுகிறது.

ஆயினும் பாலியல் வல்லுறவு செய்து கொன்ற கொடுஞ் செயலை, கட்டுப்பாடற்ற சிங்கள படையினரின் அநாகரிக செயலை, சர்வதேசத்திற்கு தெளிவாக வெளிக்காட்டியது.

மன்னம்பெரி - இசைப்பிரியா இருவரும் அரச படைகளால் பாலியல் வல்லறவு செய்யப்பட்டே கொல்லப்பட்டனர். இரு பெண்களும் பயங்கரவாதிகள் என கூறப்பட்டே கொல்லப்பட்டனர். ஆயினும் சர்வதேச அழுத்தங்களால் போர்க்குற்றங்களை விசாரித்து தண்டனை வழங்குவோம் என்றார்கள். இதுவரை எத்தகைய நீதியும் வழங்கப்படவில்லை என்பது சர்வதேசத்திற்கே தெரியும்.

## மன்னம்பெரியின் கொடூர கொலை.

1971 ஏப்ரலில் தென்னிலங்கையில் இடம்பெற்ற ஜேவிபி (JVP) கிளர்ச்சியின் போது, கதிர்காமம் முக்கிய நகரமாக செயற்பட்டது. மன்னம்பெரி மக்கள் விடுதலை முன்னணியில் இணைந்து, அவ்வியக்கத்திற்கு சீருடைகள் தைத்துக் கொடுத்து உதவி செய்து வந்தார்.

ஏப்ரல் 16 இல் இலங்கை அரச படை இக்கிளர்ச்சியை அடக்கி, நகரை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. சிங்கள இளைஞர்கள் பலர் காட்டினுள் தப்பி ஓடினர். மன்னம்பெரி உட்பட சில பெண்கள் போராளிகளுக்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.





சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அவர் இரவு முழுவதும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். பின்னர் அவரை நிர்வாணமாக்கிய இராணுவத்தினர் கதிர்காமம் புனித நகரின் வீதிகளில் நிர்வாணமாக இழுத்து வந்து, பொது மக்கள் முன்னிலையில் வைத்து துன்புறுத்தினர். அஞ்சலகம் ஒன்றின் முன்னால் அவரை சுட்டு தீ வைத்து விட்டு அகன்றனர். பின்னர் மீண்டும் திரும்பி வந்து சுட்டுக் கொன்றனர். மன்னம்பெரி இறுதியில் தலையில் சூட்டுக் காயம் பட்டு இறந்தார்.

மன்னம்பெரியைக் கொலை செய்த குற்றத்திற்காக லெப்டினண்ட் ஏ. விஜயசூரிய, அமரதாச இரத்திநாயக்கா இருவரும் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இருவருக்கும் 16 ஆண்டுகள் கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டில் லெப்டினண்ட் விஜயசூரியா மாத்தறையில் வைத்து மக்கள் விடுதலை முன்னணியினரால் கொல்லப்பட்டார்.

கதிர்காம வீதியில் குற்றுருயிராக துடித்த மன்னம்பெரியை எரியூட்டிக் கொலை செய்தமைக்கு, சிங்கள அரசை சொந்த மக்களே குற்றஞ்சாட்டினர். சிங்கள மக்கள், ஏன் முழு இலங்கை மக்கள் மனதிலும் இன்றுவரை இலங்கை ஆளும் வர்க்க இராணுவத்தின் இந்த மிலேச்சத்தனமான எரியூட்டல் கொலை வரலாற்று அவலமாக பதிந்து அழிந்து போகாமல் இருக்கின்றது.

## நீதி மறுக்கப்பட்ட தமிழ்ப்பெண்கள்:

ஈழப்போரில் முள்ளிவாய்கால் இறுதி யுத்தத்தில் இசைப்பிரியா போன்ற பெண்களின் உடைகள் களையப்பட்டு மானபங்கப் படுத்தப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்ட போது அந்த கொலைஞர்கள் கூட்டத்தில் இருந்த ஒரு மனிதாபிமானத்தின் கமரா மாத்திரம் அதனை புகைப்படம் எடுத்து அந்த அவலத்தை உலகத்தின் கண்களுக்கு கொண்டு சென்றது.

கொடூரமான இந்த கொலைகள், அவமானங்கள், துயில் உரிதல்கள் நடைபெற்ற போது, அங்கும் சுற்றி நின்ற இராணுவத்தினர் தங்களின் தாயும் சகோதரியும் பிள்ளைகளும் போன்றவர்கள் என்றோ இவர்களும் பெண்கள் என்றோ இதனைப் பார்க்காது, மனித குலம் வெட்கித் தலை குனியும் செயற்பாடுகளையே செய்தனர்.

இதன் மூலம் அந்த மனிதாபிமானமற்ற சிங்கள அரசின் கொலைகள் உலகிற்கு அம்மணமாக்கப்பட்டது. ஆனால் அந்தப் புகைப்பட ஆவணம்தான் இலங்கை இராணுவம் மிகக் கீழ்த்தரமான இராணுவம் என்று மீண்டும் உலகிற்கு அடையாளம் காட்டியது.

இது போன்ற மனித அரக்க குணங்கள் சிங்கள நாட்டின் தேசியத்தின் பெயரால், மதத்தின் பெயரால், நாட்டுப் பற்றாளர் என்ற பெயரால் அவ்வப் போது தமக்கு வசதியான விடயங்களை முன்னிறுத்தி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

உலகின் பல மூலைகளிலும் மனித குலம் இதனைத் தடுத்து நிறுவதற்கான போராட்டங்களை நடாத்திக் கொண்டுதான் இருக்கின்றது. சர்வதேசம் கண்ணை மூடிக் கொண்டிருந்தாலும் முள்ளிவாய்க்காலில் நடந்தது வெறும் போர்க்குற்றம் இல்லை. அது பாரிய இனப்படுகொலையே.

இந்த உண்மையை ஏன் உலகம் இன்னமும் புரிந்துகொள்ள முடியாமல் உள்ளது? தமிழ்ப் பெண்களுக்கு நீதி கிடைக்க சர்வதேச ரீதியில் குரல் கொடுக்கப்பட வேண்டும். தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு நீதியை வழங்குமா என்பது கேள்விக்குறியே?

மன்னம்பெரிக்கு ஓர் நீதியும், இசைபிரியாவுக்கு நீதியே இல்லையா என்பதும் இனவாதத்தின் அடிப்படைக் காரணங்களாகவே அமைகின்றன.



முல்லை பாஸ்கர்

# வெளிச்சம்



விழி பேசும் மொழிகள்
பல பல!
காதலையும் வலியையும்
கதை கதையாய்
சொல்வாய்
வண்ணங்களையும்
எண்ணங்களையும்
அறிய செய்யும் அழகி
ஐந்து புலன்களில்
ஒன்றானவள்!

கன்னங்களை முத்தமிடும்
உன் விழி நீரையும்
வீணாக்காமல்
உன்னையே நீ
கழுவி கொள்கிறாய்!

வள்ளுவனும் சொன்னான்
அன்று
கல்வி இல்லாதவன்
கண்கள் புண்கள் என்று!
பிறப்பும் இறப்பும்
இல்லா வாழ்க்கை இல்லை.
மண்ணுக்குள்
புதைந்து போகும் விழிகளை
நாம் ஏன்
தானம் செய்யக்கூடாது?

வெளிச்சம் இல்லா
மனிதனுக்கு
வெளிச்சத்தை கொடு.
புராணம்
படித்தவர்களுக்கு தெரியும்,
சிவனுக்கு
தன் கண்களைக் கொடுத்த
கண்ணபிரானை பற்றி!

நீ இறந்தும் வாழ்வாய்!
ஒளி கொடுப்போம்
ஒருவருக்காவது!!

# ஜே.வி.பி அரசாங்கமும்



ஐ.வி.மகாசேனன்

# நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலும்

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடியும், அரகலய சமூக இயக்கத்தின் தாக்கமும் அநுரகுமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அலையை தென்னிலங்கையில் உருவாக்கியது. அதன் அறுவடையை 2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளிலும் அடையாளம் காணக்கூடியதாக அமைந்தது.

எனினும், தேசிய மக்கள் சக்தியின் மூலமான ஜே.வி.பி சார்ந்த கடந்த கால அனுபவங்கள், ஈழத்தமிழர்கள் மீது தேசிய மக்கள் சார்ந்த விம்பத்தை உருவாக்கியிருக்க முடியவில்லை. தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க என்ற மாயை வடக்கு-கிழக்கிலும் இளையோர்களிடையே துளிர்விடுகின்றதா? மாற்றம் எனும் மாயமான் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா? எனும் சந்தேகங்கள் தமிழ்த்தேசிய ஆர்வலர்களிடம் ஏற்பட்டுள்ளது.

எனினும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் இணைந்து கொள்வதை பலரும் நிராகரித்தமை, தேசிய மக்கள் சார்ந்த மாயை வடக்கு - கிழக்கில் இன்னும்





போதிய தாக்கத்தை செலுத்த முடியவில்லை என்பது பகுதியளவில் உறுதியாகிறது. இந்நிலையிலேயே, ஈழத் தமிழர்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக பொய்யான வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும் தேசிய மக்கள் சக்தி வழங்கி வருவதனை அண்மைய செய்திகளில் அவதானிக்கலாம்.

இக்கட்டுரை தேசிய மக்கள் சக்தியின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான உள்ளார்ந்த வடிவத்தினை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் 2009 ஆம் ஆண்டு இனவழிப்பு போருக்கு பின்னர், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் பிரதான அரசியல் பொறியாக உரையாடப்பட்டு வருகின்றது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையை தீர்வு நோக்கி நகர்த்துவதற்கு, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் அவசியமானதாக முதன்மைப் படுத்தப்படுகின்றது.

இச்சொல்லாடல்களை இலங்கை அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. மகிந்த ராஜபக்ச அரசாங்கம் முதல் ரணில் - மைத்திரி தேசிய அரசாங்கம், கோத்தபாய அரசாங்கம், ரணில்-பெரமுன அரசாங்கம் தொட்டு இன்றைய அநுர குமார திசநாயக்க அரசாங்கம் வரை நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் என்ற சொல்லாடல்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனினும், தேசிய இனப்பிரச்சினையின் ஒருதரப்பாகிய ஈழத்தமிழர்களின் எண்ணங்களை கடந்தகால இலங்கை அரசாங்கங்கள் உள்வாங்கி இருக்கவில்லை. ஆதலாலேயே கடந்த 15 ஆண்டுகளில் வினைத்திறனான வகையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலின் முதற்படியைக்கூட தொட முடியாதுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதியாக பரிந்துரைக்கப்படும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான பொருள் கோடலை, கடந்த காலங்களில் தென்னிலங்கை சிவில் சமூகங்கள் திசை திருப்பியிருந்தது. குறிப்பாக ஈஸ்டர் குண்டுவெடிப்புக்கான நியாயாதிக்கம் மற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடிக்கான பொறுப்புக்கூறல் என்ற வடிவங்களில் திசை திருப்பப்பட்டது.

ஐ.நா அறிக்கைகளின் உள்ளடக்கங்களிலும், தேசிய இனப்பிரச்சினையோடு ஏனைய உரையாடல்களுக்கும் முதன்மை வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறான பின்னணியில் அநுரகுமார திசநாயக்கா அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலை முழுமையாக ஈஸ்டர் குண்டுதாக்குதல் மற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடிக்குள் மாத்திரம் சுருக்குவதற்கான முன்னாயத் தங்களையே மேற்கொள்ளுகின்றது.

தேசிய இனப்பிரச்சினை முழுமையாக தவிர்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இதனை பிரதானமான இரு செய்திகள் அடையாளப்படுத்துகிறன. ஒன்று, உள்நாட்டு பொறிமுறையில் பொறுப்புக்கூறலுக்கு தீர்வினைக் காண மூன்று குழுக்களை அநுரகுமார திசநாயக்க அரசாங்கம் அமைக்க உள்ளதாக செய்திக்குறிப்பு ஒன்று வெளிவந்திருந்தது. இவை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் நிதிக்குற்றங்கள் பற்றி ஆராய்வதையே முதன்மைப்படுத்துகின்றன. குறிப்பாக ஒழுக்காற்று அடிப்படையிலான ஆட்சி, ஊழல், வீண்விரயம் போன்றவற்றுக்கு தீர்வுகாணல் போன்ற ஜனாதிபதியின் தேர்தல் கால வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குழுமங்களை அரசாங்கம் அமைக்க உள்ளது. மேலும், இந்த உயர்மட்ட குழுக்களை பொதுத் தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கம் அமைக்க உள்ளதாக செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சர்வதேசத் தலையீட்டுடன் பிரேரிக்கப்படும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலின் அடிப்படையான தேசிய இனப்பிரச்சினை முற்றாக தவிர்க்கப்பட்டுள்ளது, அல்லது போதிய வலுவைப் பெற்றிருக்கவில்லை.

இரண்டாவதாக, ஜே.வி.பி ஈழத்தமிழர்களின் அரசியல் கோரிக்கையாக அமையும் அதிகாரப்பகிர்வை முற்றாக நிராகரிக்கும் தொனியில் அதன் பொதுச்செயலாளர் கருத்துரைத்துள்ளார். ஜே.வி.பி-யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அண்மையில் தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், அரசமைப்பின் 13வது திருத்தச் சட்டமும், அதிகார பகிர்வும் வடக்கு மக்களுக்கு அவசியமானவை அல்ல. அவர்களுக்கு அவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கே தீர்வு அவசியமாக உள்ளது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்து கொள்ள இந்த விடயங்களை பயன்படுத்தி வருகின்றனர் என்றவாறு தெரிவித்துள்ளார்.

இது தமிழ் அரசியல் தரப்பில் கொதிநிலையான விவாதங்களை உருவாக்கி இருந்தது. தமிழ் அரசியல் தரப்பினரும் ரில்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வந்திருந்தார்கள். இந்நிலையில் ஜே.வி.பி-யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, ரில்வான் சில்வாவின் கருத்தை மறுவிளக்கம் செய்திருந்தார்.

தேசிய மக்கள்சக்தியின் வவுனியாமாவட்ட உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரை





யாடலின் முடிவில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை என்று ரில்வின் சில்வா தெரிவித்தமை தொடர்பாக நான் கேள்விப்பட்டிருக்கவில்லை. அவ்வாறானதொரு கருத்தை ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை. இலங்கையில் அனைவருக்கும் சமஉரிமை உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இங்கு பிமல் ரத்நாயக்க, ரில்வின் சில்வா கருத்தை மறுத்திருக்கவில்லை. குறைந்தபட்சம் ஜே.வி.பி, ஈழத்தமிழர்களின் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை பரிசீலிக்கும் என்றவாறு கூட கருத்து உரைக்கவில்லை. இது ஜே.வி.பி அதிகாரப்பகிர்வில் உடன்பாடின்மையையே மீள மீள உறுதி செய்கின்றது.

ஜே.வி.பி நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அதுசார்ந்த தீர்வு முயற்சிகளை முழுமையாக நிராகரித்துள்ளார்கள் என்பதனையே இரு செய்திகளின் தார்ப்பரியமும் வெளிப்படுத்துகிறது.

மாறாக ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை புறந்தள்ளி, இலங்கையின் பொருளாதார பிரச்சினைக்குள் ஈழத்தமிழர்களின் அரசியல் கோரிக்கையை கரைக்கும் செயற்பாட்டையே அரச இயந்திரத்தினூடாக ஜே.வி.பி முதன்மைப்படுத்துகின்றது. இவ் அரசியல் நகர்வை நுணுக்கமாக அறிதல் அவசியமாகின்றது.

முதலாவது, பொருளாதார பிரச்சினை இலங்கைக்கு பொதுவானதாகும். இலங்கை என்ற ஒரே நாட்டுக்குள்ளேயே சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம் மற்றும் மலையகத் தமிழர்கள் வாழ்கின்றார்கள். பொருளாதார நெருக்கடி தென்னிலங்கையை மாத்திரமன்றி முழு இலங்கைத் தீவிற்கும் பொதுவானதாகும்.

தென்னிலங்கையின் பொருளாதார பிரச்சினை ஈழத் தமிழர்களிடமும் தாக்கத்தை செலுத்தக் கூடியதாகும். தென்னிலங்கையினை விட ஈழத்தமிழர்களின் தாக்கம் உயர்வாகவும் காணப்படும். கடந்த முப்பதாண்டு போரிலிருந்து, முழுமையாக மீளாத நிலையில் இலங்கைத் தீவின் பொருளாதார நெருக்கடி ஈழத்தமிழர்கள் மீது செலுத்தும் தாக்கம் உயர்வானதாகவே காணப்படும்.

இவ் அடிப்படையிலேயே, ஈழத் தமிழர்களின் பொருளாதார பிரச்சினை மீது ஜே.வி.பி கரிசனை செலுத்துவது ஆரோக்கியமானதாகும். இவ்வாறான சிந்தனைக்குள் பயணிப்பார்களாயின் கடந்த முப்பதாண்டு போருக்கான காரணங்களையும், போருக்கு பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் வடக்கு-கிழக்கு மறுசீரமைக்கப்படாமைக்கான காரணத்தையும் அறிந்து கொள்வார்கள்.

இலங்கை அரச கட்டமைப்பில் ஆழமாக வேரூன்றியுள்ள சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தி தடுக்கப்பட்டுள்ளது. இதனை சீர்செய்வது அரசியல் தீர்வின் அடிப்படையிலானதாகும். ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினை அது சார்ந்த தீர்வை மறுத்துக்கொண்டு, ஜே.வி.பி பொருளாதாரத்தைப் பற்றி உரையாடுவது முழுமையான ஏமாற்றுவித்தையாகவே காணப்படுகின்றது.

இடதுசாரி கருத்தியலை வரித்துக்கொண்டதாக விம்பப்படுத்தும் ஜே.வி.பி, ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமையினை புரிந்துகொள்ள மறுக்கிறது. இனப்படுகொலையை எதிர்கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமையைப் புறந்தள்ளி, நாட்டைக் கட்டியெழுப்ப பொருளாதார உரையாடல்களை முன்னெடுப்பது மாயமான் உரையாடலாகவே முடியக் கூடியதாகும்.

இரண்டாவது, ஜே.பி.பி அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி சார்ந்த உரையாடல்கள் ஒருவகையில் தமிழ் மக்கள் மீது இலங்கை அரச இயந்திரத்தால் நிகழ்த்தப்படும் கட்டமைக்கப்படும் இனவழிப்பின் தொடர்ச்சியாகவே அமைகின்றது. இவ் இன அழிப்பை ஈழத்தமிழர்களின் மூத்த அரசியல் வரலாற்று ஆய்வாளர் மு.திருநாவுக்கரவு அவர்கள் ‘கட்டமைக்கப்பட்ட பொருளாதார இனப்படுகொலை என அடையாளப்படுத்துகின்றார்.

அதாவது, ‘இலங்கையில் ஒற்றையாட்சி முறை என்பது கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வாதமாகும். அநுரகுமார கூறும் அவரது அமைப்பு மாற்றம் கொள்கையில் ஒற்றையாட்சியை மாற்றுவது என்பது கிடையாது. ஒற்றையாட்சியை பொருளாதார மத்தியத்துவத்தின் கீழ் மேலும் பலப்படுத்துவதே அவரது அரசியல் பொருளாதாரக் கொள்கை. அவர் கூறும் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடு என்பது கட்டமைக்கப்பட்ட பொருளாதார இனப்படுகொலையே தவிர வேறில்லை’ என விபரிக்கின்றார்.

இக் கட்டமைக்கப்பட்ட பொருளாதார இனப்படுகொலை, ஈழத்தமிழர்களின் தனித்துவமான பொருளாதார பண்பாட்டை சிதைத்து, தென்னிலங்கையின் பௌத்த சிங்கள பண்பாட்டுடன் கரைப்பதாகவே அமையக் கூடியதாகும். ஈழத்தமிழர்களின் பொருளாதார அபிவிருத்தியை சிந்திக்கும் தரப்பினர், வடக்கு - கிழக்கினை பொருளாதார வலயமாக இணைத்து சிந்திப்பதே ஆரோக்கியமானதாகும்.



எனினும், ஜே.வி.பி அரசாங்கத்தின்கட்டமைக்கப்பட்ட பொருளாதார இனப்படுகொலை, வடக்கு, கிழக்கு பிரதேசங்களை தனித்தனியாக தென்னிலங்கையுடன் இணைக்கும் வகையிலான போக்குவரத்துக்களாலும், பொருளாதார ஆதிக்கத்தாலும் ஈழத்தமிழர்களின் நிலங்களில் சிங்கள பௌத்த பண்பாட்டை பொருளாதார ரீதியாக படர விடுவதாகவே அமைகின்றது.

மாறாகவடக்கையும்கிழக்கையும் பொருளாதார ரீதியாக இணைக்கும் வகையிலான முனைப்புக்கள் காணப்படவில்லை. இது திட்டமிட்ட வகையில் பொருளாதார அபிவிருத்தி விம்பத்தில் வடக்கு - கிழக்கில் தென்னிலங்கையின் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை உறுதிசெய்யக் கூடியதாக அமையுமென்பதே கடந்த கால அனுபவங்களின் தொடர்ச்சியாகும்.

மூன்றாவதாக, ஜே.வி.பி தேசிய இனப்பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வை மறுக்கும் அதேவேளை சம உரிமை என்பதனை அடிக்கடி பயன்படுத்துகின்றார்கள். சிங்கள பௌத்த பேரினவாதத்துடன், சிறுபான்மை தேசிய இனமாகிய ஈழத்தமிழர்களுக்கு ஒற்றையாட்சி கட்டமைக்குள் சம உரிமை வலுவானதாக அமையுமா என்பது தொடர்பில் ஆழமாக சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

பிரான்சிய புரட்சியின் தாரக மந்திரமான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஒரே தேசிய இனத்துக்குள் எதேச்சாதிகார ஆட்சியாளர்களிடமிருந்து குடிமக்களால் கோரப்பட்டது. குடியரசு உருவாக்கத்தால் சாத்தியப்படலாயிற்று. இலங்கையில் மாறுபட்ட விகிதாசாரங்களை கொண்ட மற்றும் முரண்பட்ட அரசியல் கலாசாரத்தை உடைய தேசிய இனங்களிடையே பகிரப்படும் சமஉரிமை சிறுபான்மை தேசிய இனங்களுக்கு பாதுகாக்கப்படுமா என்பதில் சந்தேகங்களே காணப்படுகின்றன.





மீன் தொட்டிக்குள் பெரிய மீன்கள் மற்றும் சிறிய மீன்கள் காணப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட பெரிய மீன் குழுவை சேர்ந்த தலைவன், 'மீன்களை மீன்கள் விழுங்கலாம்' என சம உரிமை அடிப்படையில் பிரகடனம் செய்கின்றார். இது சம உரிமை என்ற சொல்லாடலின் பின்னணியில் சின்ன மீன்களுக்கு மகிழ்வை தரலாம். எனினும் எதார்த்தத்தில் சின்ன மீன்களை பெரிய மீன்கள் விழுங்கும். சமஉரிமை பெரிய மீன்களுக்கு சாதகமான சூழலையே உருவாக்கக் கூடியதாகும்.

இவ்வாறான எதார்த்தமே இலங்கையிலும் சம உரிமை என்ற சொல்லாடல் பிரதிபலிக்கிறது. சிறுபான்மை தேசிய இனங்கள் மீது பேரினவாதம் ஒடுக்குமுறையை மேற்கொள்வதற்கான அங்கீகாரமாகவே சம உரிமை அமைகின்றது. வடக்கு - கிழக்கில் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பை ஊக்குவிக்கக்கூடிய உத்தியாகவே இது அமைகின்றது.

சம சுதந்திரம், சம தன்னாதிக்கம் என்பனவற்றின் அடிப்படையிலான சுயநிர்ணயத்தை தமிழர்களுக்கு வழங்குவதனால் மாத்திரமே, சமஉரிமை என்ற சொல்லாடல் இலங்கையில் அர்த்தப்படக் கூடியதாக அமையும்.

எனவே, ஜே.வி.பி அரசாங்கம் ஈழத்தமிழர்களையும், ஈழத்தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாத மனநிலையிலேயே பொதுத்தேர்தலை எதிர்கொள்கின்றது. வெறுமனே, தென்னிலங்கையை திருப்திப்படுத்துவதால் இலங்கை அரச அதிகாரத்தை கைப்பற்றலாம் என்ற முனைப்புடனேயே செயற்படுகின்றனர். இதனையே ஜே.வி.பி அரசாங்கத்தின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான உள்ளடக்கங்கள் வெளிப்படுத்துகின்றன.

இது ராஜபக்சக்களின் நிகழ்ச்சி நிரலின் தொடர்ச்சியாகவே அமைகின்றது. ஈழத் தமிழர்கள் தொடர்பான நிலைப்பாட்டில் அநுரகுமார திசநாயக்க, ராஜபக்ச-3 என்ற விம்பத்தையே தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றார். கடந்த காலங்களில் ராஜபக்சக்களும் ஈழத்தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை பொருளாதார பிரச்சினையாகவே உரையாடி இருந்தார்கள்.

அநுரகுமர திசநாயக்க அமைப்பு மாற்றம் என்ற விம்பத்துக்கு பின்னால் பொருளதார அபிவிருத்தியை கவர்ச்சிகரமாக கையாளுகின்றார். ஈழத் தமிழர்களுக்கு பொருளாதார பிரச்சினை இல்லை என்பதல்ல. மாறாக இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வினை காணாது, நிலையான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என்பதே நிதர்சனமானதாகும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை அரசியல் உரிமை சார்ந்தது மட்டுமல்ல. பொருளாதாரத்தை பங்கிடும் இறைமையுடன் கூடிய உரிமையும் பிரச்சினையாகதான் உள்ளது. தமிழர்களின் இறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டு, சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுகையிலேயே இலங்கையின் அரசியலும் பொருளாதாரமும் ஸ்திரத்தை பெறக்கூடியதாக அமையும்.

# ராஜபக்சக்களின் பின்வாங்கலும்



# ரில்வின் சில்வாவின் நேர்காணலும்



ஐ. நாவின் அபிவிருத்திக் குழுவின் வருகையோடு தேர்தல் திருவிழா சூடுபிடித்துள்ளது. இந்த ஜனநாயகச் சடங்கில் வசைபாடலும், குழி பறித்தலும், அணி சேர்தலும், கோட்பாட்டு மோதலும் முதன்மை பெறுவதைக் காண்கிறோம்.

தமிழ்த் தேசியத்தை காப்பாற்ற வேண்டுமென்கிற முழக்கம் சகல மேடைகளிலும் எதிரொலிக்கிறது. ஒட்டாத குழுக்கள் அனைத்தும் தேச விடுதலை பற்றி பேசாமல், தேர்தலில் எத்தனை ஆசனங்களை கைப்பற்றுவது என்கின்ற இலட்சியத்தோடு இயங்குகின்றன. தற்போதைய சூழலில் தேர்தல் வெற்றிக் கணக்குகள், விருப்புவாக்கு தெரிவுகள்



குறித்தே பரவலாக ஆராயப்படுகிறது.

தமிழர் தாயக கணிப்புகள் பல, வன்னி மாவட்டத்தில் செல்வமும், காதர் மஸ்தானும் வெற்றி பெறுவார்கள் என கட்டியம் கூறுகின்றன. ஏனைய மாவட்டங்களில் எவரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது என்கிறார்கள்.

மலையகத்தில் அனுஷா சந்திரசேகரன், வடிவேல் சுரேஷ், ஜீவன் தொண்டைமான் மற்றும் திகாம்பரம் ஆகியோர் முன்னிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

வடக்கு -கிழக்கு தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை திருக்கோணமலையிலும் அம்பாறையிலும் 'மோதல் தவிர்ப்பு' உடன்பாடு காணப்பட்டு தமிழரசுக் கட்சி போட்டியிடுகிறது.

சங்கின் உறுப்பினர்களும் திருக்கோணமலை வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அதன் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அருண் ஹேமச்சந்திராவும் திசைகாட்டிச் சின்னத்தில் இறங்குவதால் போட்டி பலமான இருக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.



இவ்விரண்டு உணர்திறன் மிக்க இடங்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற முன்னிற்கும் தமிழ்த் தேசியவாதிகள், ஏனைய மாவட்டங்களில் ஏன் ஒன்றிணையவில்லை என்கிற ஆதங்கம் மக்களிடம் உண்டு. இனி தமிழர் தாயக அரசியலுக்கும் தென்னிலங்கை அரசியலுக்குமான மோதல்கள், முரண்பாடுகள் குறித்துப் பார்ப்போம்.

இளையோர் பார்வையானது அநுராவின் தேசிய மக்கள் சக்தியின் மீது குவிவதை தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் எச்சரிக்கை உணர்வோடு அவதானிக்கின்றன.

இதன் எதிர்வினை அரசியலாக, 'வடக்கு கிழக்கு ஊழல் அரசியல் வாதிகளை அநுராவால் அம்பலப் படுத்த முடியுமா?' என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், 'மதுபானசாலை அனுமதிப்பத்திர பட்டியலை (பார் லைஸென்ஸ்) அநுர வெளியிடுவாரா?' என்று சுமந்திரனும் கூறத் தொடங்கியுள்ளனர்.

உண்மையிலேயே சகல மட்ட ஊழல்களையும் அநுர அரசு அம்பலப்படுத்த வேண்டுமென்பதே மக்களின் பெருவிருப்பாகும்.

2015 இல் உருவாக்கப்பட்ட 'நல்லாட்சி' அரசின் மத்திய வங்கி கடன் முறி ஊழல் பற்றிய விசாரணைகள் தொடங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பெறுமதி சேர் வரி (வாட் வரி) 3.5 பில்லியன் ரூபாவை செலுத்தாத மூவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**"இனி தமிழர் தாயக அரசியலுக்கும் தென்னிலங்கை அரசியலுக்குமான மோதல்கள், முரண்பாடுகள் குறித்துப் பார்ப்போம். இளையோர் பார்வையானது அநுராவின் தேசிய மக்கள் சக்தியின் மீது குவிவதை தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் எச்சரிக்கை உணர்வோடு அவதானிக்கின்றன. இதன் எதிர்வினை அரசியலாக, வடக்கு கிழக்கு ஊழல் அரசியல்வாதிகளை அநுராவால் அம்பலப்படுத்த முடியுமா? என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், மதுபானசாலை அனுமதிப்பத்திர பட்டியலை (பார் லைஸென்ஸ்) அநுர வெளியிடுவாரா? என்று சுமந்திரனும் கூறத் தொடங்கியுள்ளனர்."**



‘நுணலும் தன் வாயால் கெடும்’ என்பதைப் போல, அநுர அரசிற்கு சவால் விடுத்த உதய கம்மன்பிலவிடமே, அதற்கான ஆதாரங்களை வெளியிடச் சொல்லி விஜித ஹெரத் எச்சரித்துள்ளார். திங்களன்று வருமென்கிறார் கம்மன்பில, பார்ப்போம்.

இராஜபக்சக்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்தாலும், அக்குழுவின் இணை அனுசரணையாளர்களான கம்மன்பிலவும், விமல் வீரவன்சவும் தமது அரசியல் கருத்துக்களை உதிர்த்த வண்ணமுள்ளனர்.

இருப்பினும் இராஜபக்சக்களின் ‘ஈரடி பின்னால்’ நகர்வில் ஒரு அரசியல் தந்திரம் மறைந்திருப்பதாக ஊடக நண்பர் ஒருவர் தனது ஆய்வு நிகழ்வொன்றில் குறிப்பிட்டிருந்தார் . சனாதிபதி தேர்தலில் அநுர தரப்பினரால் கட்டமைக்கப்பட்ட ‘இராஜபக்ச எதிர்ப்பு’ பிம்பத்தை நாடாளுமன்றத் தேர்தலில் வலுவிழக்கச் செய்ய, இராஜபக்சக்கள் போட்டியிடவில்லை என்பதே நண்பரின் வாதம்.

குறைக்கப்படும் வாக்குகள் சஜித் பக்கம் கணிசமான அளவில் திரும்பும் என நண்பர் எதிர்பார்க்கின்றார். இது அநுராவின் வாக்குகளை உடைக்கும் மஹிந்தரின் தந்திரமாக இருக்கலாம். ஆனாலும் ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேடுகளை தொடர்ச்சியாக வெளிக்கொண்டு வருவதன் ஊடாக, கடந்த ஆட்சியாளர்களை அரசியல் ஊடக வெளியில் முக்கிய பேசுபொருளாக வைத்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி. ஆகவே இராஜபக்சக்கள் தற்காலிகமாக ஒதுங்கினாலும் அநுராவின் கிடுக்கிப்பிடி, தேர்தலின் பின்னரும் தொடரும் வாய்ப்புகள் அதிகம் போல் தெரிகிறது .

> **இராஜபக்சக்களின் ‘ஈரடி பின்னால்’ நகர்வில் ஒரு அரசியல் தந்திரம் மறைந்திருப்பதாக ஊடக நண்பர் ஒருவர் தனது ஆய்வு நிகழ்வொன்றில் குறிப்பிட்டிருந்தார். சனாதிபதி தேர்தலில் அநுர தரப்பினரால் கட்டமைக்கப்பட்ட இராஜபக்ச எதிர்ப்பு பிம்பத்தை நாடாளுமன்றத் தேர்தலில் வலுவிழக்கச் செய்ய, இராஜபக்சக்கள் போட்டியிடவில்லை என்பதே நண்பரின் வாதம்.**

அடுத்ததாக ஜே. வி .பி இன் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அவர்கள் வழங்கிய நேர்காணலொன்று, தமிழ் ஊடகப் பரப்பில் பலத்த விவாதமொன்றினை ஏற்படுத்தியுள்ளது .

அது பற்றி பேசாமல் கடந்து செல்ல முடியாது.

‘அடித்தட்டு தமிழ் மக்களின் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையே’ என்று கூறும் சில்வா, ‘அம்மக்களுக்கு 13 அல்லது அதிகார பகிர்வு என்ற பிரச்சினை இல்லை’ என்கிறார். ஒட்டு மொத்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சி வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களையும் பாதிக்குமென்பது உண்மை.

தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வாதார பிரச்சினையை அவர் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார் என்பதை அந் நேர்காணலே எடுத்தியம்புகிறது.


ஆனாலும் இடதுசாரி கருத்தியலை வரித்துக் கொண்ட தோழர் டில்வின் சில்வா அவர்கள், ஒரு தேசிய இனத்தின் அரசியல் உரிமையினை ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறார்?

அரசியல் உரிமை மட்டுமல்ல.... பொருளாதாரத்தை பங்கிடும் இறைமையுடன் கூடிய உரிமையும் மக்களின் பிரச்சினைதான். இவர்களுக்கும் நம்மவர்களுக்கும், இந்த இரண்டையும் இணைத்து முன்னெடுக்கும் அரசியல் புரிய வேண்டும்.

இனப் படுகொலையை எதிர்கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமையைப் புறந்தள்ளி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

வல்லரசுக் கழுகுகள் வட்டமிடுகின்றன. அவதானம் தேவை. மக்களோடு பேசுங்கள். அவர்களே தமக்கான அரசியல் தீர்வு எது வென்று சொல்வார்கள்.

தமிழ்மகள் (சுவிஸ்)



# தொடாதே!

## அவளைத் தொடாதே!!

இன்றைய கலியுகத்தில்
பெண்ணே உனக்கு
அறியாத வயதிலேயே
பள்ளியில் கலவிப் பாடம்
கற்றுக் கொடுக்க வேண்டுமோ?

இந்தப் பாலியல் கொடுமையெல்லாம்
பெண்ணுடுத்தும் ஆடையினால் தானாம்
என்று சில ஆடவர்களின் கருத்து - இது
அவள் உடுத்தும் ஆடை தான்
காரணமென்றால் சொல்லுங்கள்
துள்ளித்திரியும் மழலை அவள்
எவ்வாடை உடுத்தியிருப்பாள்

காமுகர்களின் கைகளில்
அவள் சிக்கிக் கொண்டு
தப்பிக்க வழியின்றி
திகைத்து நின்றிருப்பாள்!
காக்க வேண்டிய கடவுளும்
கல்லாய்த் தான் போயிருப்பான்!!

இவ்வுலகில் நொடிக்கு
ஒரு சிறுமியின் மரண ஓலம்
கேட்டுக் கொண்டு தானிருக்கிறது.
அவையெல்லாம் செய்தித்தாள்களில்
வெறும் செய்திகளாகவே
வந்து மறைகிறதே!
சிறுமிகளின் தேகங்களைத்
தொடாதீர்கள் - நாளை
உங்களின் தலைமுறையைக்
கருவிலே சுமக்க
பெண்ணினமே இருக்காதே!

இப்பூமியை அவள் அறியுமுன்
உங்களால் சிதையுண்டு
இம்மண்ணுக்கு உரமாகிப் போகிறதே
அந்தப் பிஞ்சு உடல்!



மரித்துப் போன மனிதமே
பால் மணம் இன்னும் மாறவில்லை
பாலியல் செய்ய எப்படித் தான்
உங்களுக்கு மனம் வந்ததோ?

அப்பனைப் போல்..
தாத்தனைப் போல்..
மாமனைப் போல்..
அண்ணனைப் போல்..
பக்கத்து வீட்டுக்காரனைப் போல்..
ஆசானைப் போல்..
யார் உருவத்திலும் உலாவித் திரியலாம்
இந்தக் காமப்பிசாசுகளை மழலை
அவள் எப்படி இனம்
கண்டு கொள்வாளோ?
தொட்டில் பருவ மழலையை
காமுகன் கட்டிலுக்கு அழைக்கிறான்
அதன் பின் அவள் உறங்குவது
என்னவோ கல்லறையில் தான்!

பொல்லாத உலகத்தில்
பெண்ணாகப் பிறந்து விட்டாய்.
சிறு மொட்டென்றும் பாராது
காமுக வண்டுகள் அலையும்
கலியுகக் காலமடி பெண்ணே!



# தொடாதே!

## அவளைத் தொடாதே!!

கல்வி கற்கும் வயது கூட
இல்லை அவளுக்கு
கலவிப் பாடம் கற்றுத் தர
அழைக்கிறான்!
காமம் கொண்டு அலையும்
காமுகனே
ஆசை கொண்டு
அள்ளி அணைக்கும் அவளை
காமம் கொண்டு கட்டித்
தழுவாதீர்கள்!!

கருவில் இருக்கும்
பெண் சிசுவும் கலங்குகிறது
உங்களின் இச்செயலைக் கண்டு!

அன்னையின் கருவறையில்
மட்டும் தான் அவள்
பாதுகாப்பாய் இருக்கிறாளோ?
இனி இப்புவியில் தடம் பதித்திட
அவள் போராட வேண்டுமோ?

அன்று
கள்ளிப்பால் ஊற்றிக்
கொன்ற காலமும் போய்

பெண்ணே
காமப்பால் தீர்த்துக் கொல்லும்
கலியுகக் காலமடி
இன்று!

அன்னையின் கருவில்
பெண்ணென்று நீ அறிந்தால்
அங்கேயே
கலைந்துவிடு!!

மங்கையராய் பிறப்பதற்கே
நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா - என்று
கவிமணி பாடிய கவியை
இன்று அவளுக்கு என்னவென்று
சொல்லிக் கொடுப்பது?

தசைப் பிண்டங்களில் காம
இச்சைத் தீர்க்கும் உங்களுக்கு
மரணதண்டனை தீர்ப்பாக
கிடைக்காதோ?
நீதி தேவதையும் அவள் கண்களைக்
கட்டிக் கொண்டாளோ?

காமப் பசி கொண்ட
ஓநாய்கள் பட்டாம்பூச்சிகளை
வேட்டையாடுகின்றன!

ஐயகோ! என்ன பரிதாபமிது!
அவைகளின் வண்ணச் சிறகுகள்
பிய்த்து வீசப்படுகின்றன.
அவர்களின் உடலின்
வலிகளில் சுகம் காணுகின்றன

உடலின் வண்ணங்கள்
கலைந்து ஓநாய்க்கு
இரையாகின்றன

தனக்கு நடந்ததை
சொல்லத் தெரியாத
மழலையவள்!
வலியால் வரும் கண்ணீரும்
விம்மல் கவ்விய வார்த்தையும்
பதற்றம் அப்பிய பார்வையும்
எழுதவே என் கை நடுங்குகிறதே!
காமுகன் தொட்ட அவள்
பிஞ்சு உடல் எப்படியெல்லாம்
நடுங்கியிருக்குமோ என்று
எண்ணிய போது..

# தொடாதே!

## அவளைத் தொடாதே!!



அறியாத வயதில் நடந்தது
எதுவென்று அறியாது திகைத்து
நின்றிருப்பாள் - நாளைய
எதிர்காலத்தைக் தொலைத்து

பெண்பிள்ளைகளைப் பெற்ற
தாய்மார்களே ‘குட் டச்’ ‘பேட் டச்’
பெண்பிள்ளைகளுக்குச் சொல்லிக்
கொடுக்காதீர்கள் மாறாக
ஆண்பிள்ளைகளுக்குச் சொல்லிக்
கொடுங்கள் ‘பேட் டச்’ எந்த
பெண்ணிடமும் செய்யக் கூடாதென்று

நித்தம் ஒரு சிறுமி
சத்தம் போட்டுக் கத்துகிறாள்.
தொட்டுப் பார்க்கும் கைகளை
வெட்டிப் போட முடியாமல்
கைகட்டி வேடிக்கை மட்டுமே
பார்க்கும் சராசரி மனிதனைப்
போல இனியும் இருந்து விடாதீர்கள்

அவள் சிட்டாய் சுதந்திரமாய்
பறக்கும் முன்பே அவளின்
சிறகுகளை சிதைத்து விடாதீர்கள்!
காமுகர்களே
மழலையின் உடலில் எங்கு
கண்டீரோ - காமம்?
உங்களிடம் ஒரு பெண்ணாய்
இருந்து மன்றாடிக் கேட்கிறேன்
வேண்டாமே இனியும் வேண்டாமே!!
பட்டாம்பூச்சியாய்ப் பறந்து திரியும்
அவளை ஒரு நொடி நீ தொட்டாலும்
அவள் வண்ணம் கலைந்து விடாதோ?
பறக்க விடு அவளை சுதந்திரமாய்
இவ்வுலகில் வாழவிடு!!

அடி பெண்ணே
இன்னிலை தான் உனக்கென்றால்
உன் கருவறையிலும்
ஆணினத்தைச் சுமக்காதே!
பெண்ணினத்தோடு அழிந்து
போகட்டும் இந்த உலகம்!!

# மன்னாரில் 2 மனிதப் புதைகுழிகள்



கனகராசா சரவணன்

# நீதிமன்ற உத்தரவுடன் அடுத்த கட்ட விசாரணைகள்...



மன்னார் மண்ணில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு புதைகுழிகள் தொடர்பான அடுத்தகட்ட விசாரணைகளை முன்னெடுப்பதற்கு நீதிமன்ற அனுமதி கிடைத்துள்ளது.

11 வருடங்களுக்கு முன்னர் மன்னாரில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியின் மாதிரிகளை வெளிநாட்டு ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கும், மன்னார் நகரப் பகுதியில் காணப்படும் சதொச மனித புதைகுழியில் ஆறு வருடங்களுக்கு முன்னர் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புகளை தடயவியல் பரிசோதனைக்கென பொருத்தமான மற்றொரு இடத்தில் சேமித்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் நீதிமன்றம் ஒக்டோபர் 16 அன்று அனுமதி வழங்கியுள்ளது.

திருக்கேதீஸ்வரம் மற்றும் சதொச மனித புதைகுழிகள் குறித்த வழக்குகளிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன், வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி இந்தத் தகவலை வெளியிட்டார்.

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து 2013 ஆம் ஆண்டு அகழ்ந்து எடுக்கப்பட்ட 82 சடலங்களின் கார்பன் ஆய்வுக்கு தேவையான மாதிரிகளை புளோரிடா, மியாமியில் அமைந்துள்ள பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனத்திற்கு அனுப்புவதற்கான நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கு சட்ட வைத்திய அதிகாரி தனஞ்சய வைத்தியரத்ன நீதிமன்றத்திடம் அனுமதி பெற்றதாக சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்.

'ஏற்கனவே மனித எச்சங்களில் இருந்து பகுப்பாய்விற்காக பிரித்து எடுக்கப்பட்ட மாதிரிகள் நீதிமன்ற காவலில் இருக்கின்றன. அதனை சீ-14 பரிசோதனைக்காக புளோரிடா



மானுடவியல் ஆய்வகத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் இன்று வைத்தியரினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள நீதிமன்றத்தினால் கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.'

சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹேவகே, திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகள் தொடர்பில் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவிருந்த போதிலும், அவர் நீதிமன்றில் முன்னிலை ஆகவில்லை என சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார்.

'குறித்த அறிக்கையை எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி தாக்கல் செய்வதாக தவணை இடப்பட்டுள்ளது. அன்றைய தினம் குறித்த அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படும். அத்தோடு குறித்த மாதிரிகள் சீ-14 பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் குறித்தும் அன்றைய தினம் அறிவிக்கப்படும்.'

மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் மன்னார் நீதவான் நீதிமன்றில் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி மன்னார் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 82 மனித உடல்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சதொச புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யப்பட வேண்டுமா?

> **மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் மன்னார் நீதவான் நீதிமன்றில் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி மன்னார் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்ற உத்தரவுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் 82 மனித உடல்களின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.**

ஆறு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனித புதைகுழி அகழ்வு தொடர்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள விசாரணை அறிக்கையை தயாரிக்கும் ஆரம்ப கட்ட பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மன்னார் சதொச மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் பொருட்களை பிரித்தெடுக்கும் நடவடிக்கை கடந்த வாரம் ஐந்து நாட்களாக மன்னார் நீதவான் முன்னிலையில் இடம்பெற்றதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் துறையின் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ சதொச மனிதப் புதைகுழியை சுற்றி மாதிரிகளைப் பெறுவதற்காக அகழ்வு செய்ததாக சட்டத்தரணி சாந்திப் பிரகாசம் நிரஞ்சன், குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

'ராஜ் சோமதேவ அவர்களினால் சதோச மனிதப் புதை குழியைச் சுற்றி நான்கு இடங்களில் பரீட்சார்த்தமாக தோண்டிப் பார்த்து 110 சென்றிமீட்டர் மற்றும் 130 சென்றிமீட்டர் அளவில் கடந்த 8 ஆம் திகதி ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.'

தடயவியல் மானுடவியல் பரிசோதனைக்கு உரிய மாதிரிகளை வைப்பதற்கு தற்போது உள்ள இடம் போதுமானதாக இல்லை என, சட்ட வைத்திய அதிகாரி சுனில் ஹெவகே சார்பில், சட்ட மா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான சடடத்தரணிகளால் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

இந்த மாதிரிகளை வேறு பொருத்தமான இடத்தில் சேமித்து வைக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

'வைத்தியர் ஹேவகேயினால் பகுப்பாய்வு செய்யப்பட இருக்கின்ற மனித எச்சங்கள், அதாவது இறப்புக்கான காரணம், ஆண், பெண், வயதெல்லை போன்ற விடயங்கள் சம்மந்தமான தடயவியல் ஆய்வினை செய்வதற்கு இட வசதிகள் போதாமையால் நீதிமன்றத்தில் இருந்து ஒரு கட்டளை ஒன்றை பிறப்பிக்குமாறு கோரப்பட்டது. அதற்கான கட்டளை நீதி மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.'

2018 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகளின் போது அடையாளம் காணப்பட்ட மன்னார் சதொச மனிதப் புதைகுழியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 28 சிறுவர்கள் உட்பட 376 மனித உடல் உறுப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குற்றம் இடம்பெற்ற இடமாக கருதப்பட்டு மன்னார் சதொச மனிதப் புதைகுழி தோண்டப்பட்டு வருவதாக சட்ட வைத்திய நிபுணர் சமிந்த ராஜபக்ச 190 ஆவது நாள் அகழ்வு விசாரணையின் போது ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தார்.

மன்னார் சதொச புதைகுழியில் இருந்து



தோண்டி எடுக்கப்பட்ட ஆறு எலும்புகளை ஆய்வு செய்த அமெரிக்காவின் மியாமியை தளமாகக் கொண்ட பீட்டா அனலிட்டிக்ஸ் நிறுவனம் அவை கி.பி.1404 -1635 இற்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை எனத் தீர்மானித்தது.

ஜூலை 2019 இல், அந்த தீர்மானத்தை கடுமையாக நிராகரித்த களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்லியல் முதுகலைப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ, வெகுஜன புதைகுழியின் காலத்தைப் பற்றிய நம்பகமான தீர்மானத்திற்கு வரக்கூடிய வகையில், ஜூலை 2019 இல், மனித எலும்புகளுடன் தோண்டியெடுக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொருட்களில் புதிய விசாரணைகளை ஆரம்பித்தார்.


அப்போது கண்டெடுக்கப்பட்ட எலும்புகளில் சிலவற்றில் ஆழமான வெட்டுக்காயங்கள் காணப்பட்டதுடன், ஒன்றாகக் கட்டப்பட்டதாக தெரிவிக்கப்படும் எலும்புத் துண்டுகளும் மனிதப் புதைகுழியில் காணப்பட்டன.

சதொச மனித புதைகுழி மீண்டும் தோண்டப்பட வேண்டுமா? பாதுகாக்கப்பட வேண்டுமா? என்பது குறித்து அடுத்த வழக்கு விசாரணைக்கு முன்னதாக அறிக்கை அளிக்குமாறு பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ராஜபக்ச ஆகியோரிடம் நீதிமன்றம் கேட்டுள்ளதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி சாந்திப்பிரகாசம் நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.



'அத்தோடு ராஜ் சோமதேவவிடமும், எடுக்கப்பட்ட பிற பொருட்களில் இருந்து அதற்கான காலப்பகுதி என்னவாக இருக்கும் என்ற அறிக்கையையும் சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது. அத்தோடு மேலதிகமாக சதொச மனித புதைகுழியை மீண்டும் அகழ்வு செய்ய வேண்டுமா? அல்லது அதனை பாதுகாக்க வேண்டுமா? என்பது தொடர்பான அபிப்பிராயங்களை பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்களும் சட்ட வைத்தியர் ராஜபக்ச அவர்களும் அறிக்கை ஒன்றை எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

அத்தோடு, குறித்த பொருட்களை உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உரிய தரப்பினருக்கு கட்டளை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.'



# பெண் குழந்தைகள்

ஒரு கர்ப்பிணிப் பெண் தன் கணவரிடம் கேட்டாள், நீங்கள் என்ன குழந்தையை எதிர்பார்க்கிறீர்கள்? ஆணா பெண்ணா?

கணவன்- 'நமக்கு ஒரு பையன் பிறந்தால் , நான் அவனுக்கு கணிதம் கற்பிப்பேன், நான் அவன் விரும்பும் விளையாட்டுகளை கற்பிப்பேன், பொழுது போக்காக இசையை கற்றுக் கொடுப்பேன்.' இன்னும் வாழ்க்கைக்கு தேவையானவைகள் ...!

மனைவி - 'ஹா.. ஹா.. அதுவே ஒரு பெண்ணாக இருந்தால்?'

கணவன் - நமக்கு ஒரு பெண் பிறந்தால்.. நான் அவளுக்கு எதுவும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. ஏனென்றால் அவள்தான் எனக்கு எல்லா விஷயங்களையும் கற்றுத் தருவாள், எப்படி உடை உடுத்த வேண்டும், எப்படி பேசக்கூடாது., இதெல்லாம் மீண்டும் ஒரு முறை அவளிடம் கற்பேன். அவள் கற்பிப்பாள்.

சுருக்கமாக, சொல்ல வேண்டுமென்றால் அவள் என் இரண்டாவது அம்மாவாக இருப்பாள், நான் சிறப்பாக எதுவும் செய்யாவிட்டாலும் அவள் என்னை அவளுடைய ஹீரோவாக நினைப்பாள், நான் எப்போதெல்லாம் மறுப்பு சொல்வேன் என்று புரிந்துகொள்வாள்.

அவள் எப்போதும் தன் கணவனை என்னுடன் ஒப்பிட்டு பேசுவாள்.. எவ்வளவு வயதானாலும் அவளை என் குழந்தை போல நடத்த வேண்டும் என்று அவள் எதிர்பார்ப்பாள்.

மனைவி - 'அப்படியானால், உங்கள் மகள் அதையெல்லாம் செய்வாள், ஆனால் உங்கள் மகன் செய்ய மாட்டான் என்று சொல்கிறீர்களா?'

கணவன் - 'இல்லை.. இல்லை! அவரும் அதை செய்தாலும் செய்வார், ஆனால் அவர் அதையெல்லாம் செய்யக் கற்றுக் கொள்வார். ஆனால் மகள்கள் இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டே பிறக்கிறார்கள். ஒரு மகளுக்குத் தந்தையாக இருப்பது எந்த ஆணுக்கும் பெருமை.'

மனைவி, 'ஆனால், அவள் எப்போதும் நம்முடன் இருக்க மாட்டாளே.'

கணவன் - 'உண்மைதான், ஆனால் நாம் அவளுடன், அவள் இதயத்தில், என்றென்றும் இருப்போம். அதனால் அவள் நம்மை விட்டு எங்கு சென்றாலும் அது பெரிய தியாகத்தை ஏற்படுத்தாது.'

மகள்கள் தேவதைகள்... நிபந்தனையற்ற அன்பு மற்றும் அக்கறையுடன் பிறந்தவர்கள்... என்றென்றும்.

மகள்களுடன் ஆசிர்வதிக்கப்பட்ட அனைத்து அதிர்ஷ்டமான தந்தைகளுக்கும் இது சமர்ப்பணம்.



# சொந்தமாக யோசியுங்கள்

ஒரு ஊரில் ஒரு ஆள் தையல் கடை வைத்திருந்தான். அவனிடம் ஒருவன் ஒரு சட்டைத் துணி எடுத்துக் கொடுத்து தைக்கச் சொல்லியிருந்தான். வருகின்ற சனிக்கிழமை வந்து வாங்கிட்டு போ என்று அவன் சொல்லியிருந்தான்.அதே மாதிரி இவன் வந்தான்.அவன் தைத்து வைத்திருந்த சட்டையைக் கொடுத்தான்.

இவன் வாங்கி அங்கேயே போட்டுப் பார்த்தான்.கை நீளம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது.வலது கை இடது பக்கத்தை விட நீளம் குறைவாக இருந்தது.

என்ன இது இப்படிச் செய்து விட்டாய்? என்று இவன் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டான்.

அதற்கு அவன் சொன்னான்,

ஐயையோ! இதற்காகவா சங்கடப்படுகிறாய்? வலது கையை மட்டும் கொஞ்சம் உள்ளே இழுத்து வைத்துக்கொள். சரியாகப் போகிறது.மற்றபடி இந்த சட்டையில் உள்ள கலை அம்சத்தை கவனித்து பார்.எவ்வளவு அற்புதமாக செய்திருக் கிறேன்.ஒரு சின்னக் குறையைப் பொருட்படுத்தாமல் நான் சொன்னது மாதிரி கையைக் கொஞ்சம் உள்ளே இழுத்து வைத்துக் கொள்.நடந்து போ. அருமையாக இருக்கும் என் றான்.

அவனும் யோசித்துப் பார்த்தான் சரியான யோசனையாக தோன்றியது.கொஞ்சம் முயற்சி செய்து வலது கையை உள்ளே இழுத்து சட்டை சரியாக இருப்பது போல் பண் ணிக்கொண்டான்.இப்போது மறுபடியும் ஒரு பிரச்சனை. வலது கையை உள்ளே இழுத்து வைத்துக்கொண்டால் முதுகுப்பக்கம் கொஞ்சம் துணி தளர்த்தியாக தொங்குவது மாதிரி இருந்தது.

என்ன இது? முதுகுப்பக்கம் துணி குவிந்து விட்டது என் றான். ,அவன். இதற்காகவா கவலைப்படுகிறாய்?உடம்பை அதற்குத் தகுந்த மாதிரி கொஞ்சம் வளைத்துக் கொள். சரி யாகப் போய்விடும்.இதற்காக அந்த அழகான தையலைப் பிரித்து அதில் உள்ள கலை அம்சத்தைக் கெடுக்க என் மனசு இடம் கொடுக்கவில்லை.எவ்வளவு தளர்ச்சியாக இருக்கி றதோ அவ்வளவுக்கு கொஞ்சம் உடம்பை வளைத்து கொள் என்றான் தையல்காரன்.

அதுவும் நல்ல யோசனையாக தோன்றியது.சரி! என்று சொல்லி விட்டு புறப்பட்டான்.

தெருவில் இறங்கினான்.கொஞ்சம் கையை உள்ளே இழுத்து உடம்பை கொஞ்சம் வளைத்துக் கொண்டான்.சட் டைக்குத் தகுந்த மாதிரி பண்ணிக் கொண்டான்.மெதுவாக நடந்து போனான். இப்போது எதிரில் ஒருவன் வந்தான்.

இவனைப் பார்த்தான் ஆஹா! அற்புதம்! என்ன அழகான சட்டை? சும்மா சொல்லக்கூடாது.ரொம்ப நல்லா இருக்கி றது.நிச்சயமாக இந்த ஊர் மேல் தெருவில் உள்ள தையல்கா ரன்தான் இதைத் தைத்திருக்க வேண்டும் என்றான்.

இதைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சர்யம்!

அதெப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறாய்? என்று கேட்டான்.

அதற்கு அந்த வழிப்போக்கன் அவன் மிகவும் கெட்டிக்கா ரன். உன்னைப்போல் உடம்பும் கையும் வளைந்து போன ஒரு ஆளுக்கு அவனைத் தவிர வேறு யாரால் இவ்வளவு பொருத்தமான சட்டை தைக்க முடியும்? என்றான்.

தையல்காரன் பேச்சை கேட்டு அனுசரிக்கப் போய் இவ னோட நிலைமை இப்படி ஆகிவிட்டது.இதே மாதிரிதான் சில விடயங்கள் நம்மையும் கோமாளி ஆக்கிவிடும்.

எதுவாக இருந்தாலும் அந்த விடயத்தில் ஒரு அறிவுப் பூர்வ மான அணுகுமுறை நிச்சயம் அவசியம்.

ஐங்கரன் விக்னேஸ்வரா



# யாழ். மருத்துவமனைப் படுகொலைகள்

**21 அக்டோபர் அன்றைய கோரமான படுகொலையின் 37வது நினைவு தினம்.**



யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகள் (Jaffna hospital massacre) ஈழப்போரின் போது 1987 அக்டோபர் 21இல் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் நுழைந்த இந்திய அமைதிப் படை இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் நோயாளிகள், தாதிகள், மருத்துவர்கள், மற்றும் பணியாளர்கள் 90 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

மனித உரிமைக் அமைப்புக்கள் இந்த படுகொலைகளை இனப்படுகொலை எனக் கூறியுள்ளன. அதே நேரத்தில் புலிகளுக்கும், இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற சண்டைகளில், இடையில் அகப்பட்ட பொதுமக்களே கொல்லப்பட்டனர் என இந்திய இராணுவத்துக்குப் பொறுப்பான லெப். ஜெனரல் தெபிந்தர் சிங் தெரிவித்திருந்தார்.

## யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகள்:

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை வட மாகாணத்தில் மக்கள் அடர்ந்து வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு அடிப்படை மற்றும் உயர்தர மருத்துவ வசதிகளை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனை ஆகும்.

போர்க்காலங்களில் இப்பகுதி போரில் ஈடுபடுபவர்கள்






அணுகாத வண்ணம் பாதுகாக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வந்தது. 1987 அக்டோபர் 21 தீபாவளி விடுமுறை நாளாகும். அன்றும், அதற்கு முதல் நாளிலும் குடாநாட்டின் பல்வேறு பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற இந்திய இராணுவத்தினரின் ஏவுகணை வீச்சுகளில் இறந்த 70 இற்கும் அதிகமான பொதுமக்களின் உடல்கள் மருத்துவமனையின் பிணவறையில் வைக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து, யாழ் நகரை இந்திய இராணுவம் கைப்பற்றும் என்ற அச்சம் நிலவியது. இதனால் மருத்துவமனையின் ஊழியர்கள் சிலர் அச்சத்தில் பணிக்குச் செல்லத் தயக்கமடைந்த நிலையிலும் பலர் தமது கடமைகளுக்குச் சென்றிருந்தனர்.

அக்டோபர் 21, 1987 காலையில் யாழ் கோட்டைப் பகுதியில் இருந்து மருத்துவமனைப் பகுதியை நோக்கி பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களும், உலங்கு வானூர்திகளில் இருந்து குண்டுத் தாக்க்குதல்களும் நடாத்தப்பட்டன.

அன்று மாலை இந்திய இராணுவத்தினர் மருத்துவமனையின் முன்பக்கமாக உள்ளே வந்தனர். நடைபாதை வழியாக உள்ளே வந்த அவர்கள் அங்கிருந்த அனைவரையும் உள்ளே செல்லுமாறு பணித்தனர். அதன் பின்னர் மேற்பார்வையாளரின் அலுவலகத்தினுள்ளும் ஏனைய அறைகளுள்ளும் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என நேரில் கண்டவர்கள் கூறினர். அவர்களின் கூற்றுப் படி, பல பணியாளர்கள் இறந்து வீழ்ந்தனர்.

இவர்களில் மேற்பார்வையாளர், மற்றும் முதலுதவி வண்டி சாரதியும் அடங்குவர். ஒரு படையினன் பணியாளர் ஒருவரை நோக்கி கிரனேட்டு எறிந்ததில் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் ஒருவரின் கூற்றுப் படி, இந்திய இராணுவத்தினர் ஊடுகதிரியல் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த பலரைச் சுட்டுக் கொன்றனர்.

அதேவேளை எட்டாம் இலக்க வார்டில் இருந்து நோயாளிகள் பலர் இங்கு பாதுகாப்புக்காக தங்கியிருந்தனர். இறந்து விட்டதாகத் தரையில் படுத்திருந்த சிலர் உயிர் தப்பினர்.இரவு முழுவதும் துப்பாக்கிச் சூடுகளும் எறிகணை வீச்சுகளும் இடம்பெற்றன என நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.


அடுத்த நாள் அக்டோபர் 22, 1987 காலையில் மருத்துவர் சிவபாதசுந்தரம் மேலும் மூன்று தாதிகளுடன் மருத்துவமனையில் இருந்து வெளியேறினார். அவர்கள் அனைவரும் தமது கைகளை மேலே தூக்கியவாறு 'நாம் சாதாரண மருத்துவர்களும் தாதிகளும். நாம் சரணடைகிறோம்,' எனக் கத்தியபடி சென்றனர். அவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன. மருத்துவர் சிவபாதசுந்தரம் அங்கேயே கொல்லப்பட்டார். தாதிகள் மூவரும் கடும் காயங்களுக்குள்ளானார்கள்.

இதன்பின் 11:00 மணியளவில் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் வார்டு ஒன்றினுள் நுழைந்தார். ஒரு பெண் மருத்தவர் எதிரில் எதிர்ப்பட்டார். அவர் இராணுவ அதிகாரிக்கு நிலைமையை விளக்கிய பின்னர் அவர் ஏனைய பணியாளர்களை கைகளைத் தூக்கியவாறு வெளியேறி வருமாறு கூறினார். அங்கு உயிருடன் இருந்த 10 பேர் வெளியேறினர். வெளியேறும் போது அவர்கள் மருத்துவர் கணேசரத்தினம் இறந்து கிடப்பதைக் கண்டனர். அன்று மாலை இறந்தவர்கள் அனைவரினதும் உடல்கள் சேகரிக்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டன என இக்கோர நிகழ்வை நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

## பாரிய மனிதப் படுகொலை

ஆனாலும் யாழ் மருத்துவமனை வளாகத்தினுள் இருந்து தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இடையில் அகப்பட்ட பொதுமக்களே கொல்லப்பட்டனர் என்றும் இந்திய இராணுவம் தெரிவித்தது. லெப். ஜெனரல் தெப்பிந்தர் சிங் இதனை மீண்டும் வலியுறுத்தினார்.ஆனால், இத்தாக்குதல் தூண்டுதல் அற்ற பொதுமக்கள் படுகொலைகள் என மனித உரிமை அமைப்புக்களும், இலங்கை அரசும் தெரிவித்தது.

இலங்கை அரசு இத்தாக்குதலை மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் என 2008 ஆம் ஆண்டில் கூறியது. யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்களின் மனித உரிமைகள் அமைப்பு, மற்றும் ஜோன் ரிச்சார்ட்சன் போன்ற மேற்குலகக் கண்காணிப்பாளர்கள் மற்றும் பலர் இது ஒரு மனிதப் படுகொலைகள் எனக் கூறியுள்ளனர்.



# உண்மைச் சம்பவம்



ஒரே ஒரு பள்ளி மாணவிக்காக மூடப்பட இருந்த ரயில் நிலையத்தை அந்த மாணவியின் படிப்பு முடியும் வரை திறந்து வைத்த நெகிழ்ச்சியான உண்மை சம்பவம் தான் இது. இது நடந்தது ஜப்பானில்.

ஜப்பானின் கியூ ஷீராட்டகி என்கிற ஊரில் தினமும் ஒரே ஒரு ரயில் மட்டும் வந்து செல்லும் ரயில் நிலையம் ஒன்று செயல்பட்டு வந்தது. அந்த ரயில் நிலையத்துக்கு போதிய பயணிகள் வராததால் ஜப்பானிய ரெயில்வே அந்த ரயில் நிலையத்தை 2015 ம் ஆண்டு உடனடியாக மூடி விட முடிவு செய்தது.

ரயில் நிலையத்தை மூடும் முன்பு அதிகாரிகள் ஆய்வு செய்ததில் கன ஹரதா என்கிற ஒரே ஒரு பள்ளி மாணவி மட்டும் தினமும் கியூ ஷிராட்டகி ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு 35 நிமிடங்கள் பயணம் செய்து மற்றுமோர் ரயில் நிலையத்தை அடைந்து அதன் பின் பள்ளிக்கு செல்வதாக ரயில்வே அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

உடனடியாக ரயில் நிலையத்தை மூடினால் மாணவியின் உயர் படிப்பு பாதிக்கும் என்பதால் அந்த மாணவியின் படிப்பு முடியும் வரை கிட்டதட்ட 15 மாதங்கள் அந்த ரயில் நிலையத்தை திறந்து வைத்து படிப்பு முடிந்த பின் மூடியது ஜப்பானிய ரயில்வே. இப்படித் தான் தங்களுடைய நாட்டு குழந்தைகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது அந்நாட்டு அரசு.

# இஸ்ரேல் – ஈரான் படையியல் ஒப்பீடு



ஐங்கரன்

# அன்று நண்பன் ; இன்று பகைவன்



**இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், மத்திய கிழக்கு போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக வரலாற்றில் இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், பொது எதிரிக்காக இரு நாடுகளும் கைகோர்த்த சம்பவங்கள் பலவும் நிகழ்ந்துள்ளன.**

## ஏன்?

இஸ்ரேல்-ஈரான் இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், மத்திய கிழக்குக் பகுதி எப்போதும் போல கொந்தளிப்பாகவே உள்ளது. பலரும் நினைப்பது போல இரு நாடுகளும் வரலாற்று எதிரிகள் அல்லர். பல காலம் நட்புடனும் இருந்துள்ளனர்.

மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பாரிய மோதல் பற்றிய அச்சம் எழுந்துள்ளது. இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் ஈரான், இரண்டு நாடுகளில், எந்த நாட்டின் ராணுவம் பலம் மிக்கது என்ற கேள்வியும் எழுகிறது.

இரு நாட்டு ராணுவத்தின் தாக்கும் திறனை ஒப்பிட்டு, பல்வேறு அதிகாரப்பூர்வ மற்றும் இணையத்தில் கிடைக்கும் முறைகளைப் பயன்படுத்திராணுவ வலிமை மதிப்பிடப்படுகிறது.

### அன்று நண்பன் இன்று பகைவன்:

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது



என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக இருந்ததில்லை.

இன்னும் சொல்லப்போனால், பொது எதிரிக்காக இருவரும் கைகோர்த்த சம்பவங்களும் பல நிகழ்ந்துள்ளன. 1960களில், இஸ்ரேலும், ஈரானும் ஈராக்கிற்கு எதிராக இணைந்து செயல்பட்டன.

விரோதப் போக்கு கொண்ட அரபு ஆட்சிகளுக்கு எதிராக இஸ்ரேல் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கையில், ஈரான், அதன் கடைசி மன்னரான ஷா என அழைக்கப்படும் முகமது ரெசா பஹ்லவியின் ஆட்சியில் இருந்தது. ஈராக் பொது எதிரியாகவே, இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் மற்றும் ஈரானின் உளவு அமைப்பான சாவக் ஆகியவை மத்திய ஈராக்கிய ஆட்சிக்கு எதிராக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிப்பதில் முக்கிய பங்காற்றின.

மேலும், இஸ்ரேல், ஈரான், துருக்கி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு உளவு கூட்டணியை உருவாக்கின. ஷாவின் ஆட்சியின் இறுதிக்காலம் வரை இந்த உறவு அழுத்தமாக நீடித்தது.

## இஸ்ரேல் -ஈரான் ஓர் ஒப்பீடு:

ஈரான் இஸ்ரேலை விடப் பலமடங்கு பெரிய நாடு. அதன் மக்கள் தொகை கிட்டத்தட்ட ஒன்பது கோடி. இது இஸ்ரேலின் மக்கள் தொகையான ஒரு கோடியைவிட பல மடங்கு அதிகமாகும்.

கடந்த 2023 ஆண்டில் ஈரானின் பாதுகாப்பு பட்ஜெட் சுமார் 740 கோடி அமெரிக்க டாலர்களாக இருந்தது. ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பு பட்ஜெட் அதைவிட இருமடங்காக இருந்தது. அதாவது 1,900 கோடி அமெரிக்க டாலர்களாக இருந்தது.

இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஈரானைவிட இரட்டிப்பாகும்.

சமீபத்திய புள்ளி விவரங்களின்படி இஸ்ரேல் - ஈரான் ராணுவ பலம் ஒப்பீடுகளின்படி ஈரான், இஸ்ரேலைவிட ஆறு மடங்கு அதிகமான ராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது. ஈரானிடம் 6 லட்சம் ராணுவ வீரர்கள் உள்ளனர். இஸ்ரேலிடம் 1 லட்சம் வீரர்கள் உள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலிடம் 3,501 டாங்கிகள், 64 கடற்படையில் போர் கப்பல்கள், 3,106 ஏவுகணைகள், 460 போர் விமானங்கள்-ஹெலிகாப்டர்கள் உடன் 48 நில வான் ஏவுகணைகளை கொண்டுள்ளது.

ஆயினும் ஈரானிடம் போரிடும் 1,613 டாங்கிகள், 261 கடற்படையில் போர்கப்பல்கள், 1,491 ஏவுகணைகளை மட்டுமே கொண்டுள்ளது. அத்துடன் ஈரான் 336 போர் விமானங்கள்-ஹெலிகாப்டர்களையும், 279 நில வான் ஏவுகணைகளையும் வைத்துள்ளது.


## அணு ஆயுத பலம்:

இஸ்ரேல் அதன் சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுபற்றி அந்நாடு தெளிவாக ஒருபோதும் கூறுவதில்லை.

ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் இருந்தாலும், அந்நாடு அணு ஆயுதங்கள் உருவாக்குவதற்குத் தனது அணுசக்தித் திட்டத்தைப் பயன்படுத்த முயல்வதாக வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எப்போதும் மறுக்கிறது.

## அமெரிக்காவின் நிலைப்பாடு :

எப்போதும் இஸ்ரேல் சார்பான அமெரிக்காவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறுவதில்லை. ஹிஸ்புல்லா நஸ்ரல்லா கொல்லப்பட்ட பிறகு அறிக்கை வெளியிட்ட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஆயிரக் கணக்கான இஸ்ரேலிய மக்களையும், வெளிநாட்டவரையும் கொன்று குவித்ததற்கு காரணமானவரை கொன்று கணக்கை தீர்த்து விட்டோம் என்றார். இதற்கு அமெரிக்காவும் வக்காலத்து வாங்கியது. லெபனானில் 1983 இல் ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் வெடிகுண்டு தாக்குதலில் 63 பேர், அமெரிக்க கடற்படையினர் 241 பேர், பிரெஞ்சு படையினர் 58 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஈரானை எதிர்க்க, இஸ்ரேலுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா உறுதியாக வழங்கி வருகிறது.

| |  |  |
|---|---|---|
| மக்கள் தொகை | 96 லட்சம் | 8.86 கோடி |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (அமெரிக்க டாலர்களில்) | 525 பில்லியன் | 413 பில்லியன் |
| தனிநபர் ஜிடிபி (அமெரிக்க டாலர்களில்) | 54,931 | 4,669 |
| பாதுக்காப்பு துறை பட்ஜெட் (அமெரிக்க டாலர்களில்) | 19 பில்லியன் | 7.4 பில்லியன் |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்பு துறையின் விகிதம் | 4% | 2% |

*2022க்கான தரவுகள். சில விவரங்கள் பொதுவெளியில் கிடைக்கும் தரவுகளில் இருந்து மதிப்பிடப்பட்டுள்ளன.



**லெபனானில் ஷியா, சுனி முஸ்லிம் வேறுபாடு:**

லெபனான் பொதுவாக ஷியா முஸ்லிம் நாடாக அறியப்பட்டாலும், அங்கு ஷியா, சுனி முஸ்லிம்கள் ஏறக்குறைய சம அளவில்தான் உள்ளனர்.

அதிகாரப்பூர்வ கணக்கெடுப்பு அங்கு நடைபெறா விட்டாலும், கடந்த 2022 ம் ஆண்டு வெளியிட்ட புள்ளி விவரத்தின்படி சுனி முஸ்லிம்கள் 31.2 சதவீதம், ஷியா முஸ்லிம்கள் 32 சதவீதம் உள்ளனர் என தெரிய வருகிறது.

இது தவிர கிறிஸ்தவர்கள் 32.4 சதவீதம் உள்ளனர். இந்துக்கள், பௌத்தர்கள், யூதர்கள், சிறுபான்மையினராவர்.

**சுனி, ஷியா முஸ்லிம் நாடுகளின் நிலைப்பாடு:**

நஸ்ரல்லா கொலையான பிறகு, சுனி முஸ்லிம்கள் தலைமையிலான பெரும்பாலான அரபு நாடுகள் அமைதி காத்தன. இஸ்ரேலுடனான உறவை சீர் படுத்துவதா அல்லது ஹஸ்புல்லாவை ஆதரிக்கும் ஈரானை எதிர்ப்பதா என்ற குழப்பம் தான் இதற்கு காரணம்.

ஹிஸ்புல்லாவை 32 ஆண்டாக வழி நடத்திய நஸ்ரல்லாவின் எதிரி நாடுகள் பட்டியலில் இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய நாடுகள் பல இருந்தன. இதனால்தான் மேற்கத்திய நாடுகள், வளைகுடா அரபு நாடுகள், அரபு லீக் ஆகியவை ஹிஸ்புல்லாவை பயங்கரவாத அமைப்பு என அறிவித்திருந்தன.

சுனி முஸ்லிம் நாடான சவுதி அரேபியா, லெபனானில் நடக்கும் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்தாலும், நஸ்ரல்லா பற்றி எதுவுமே கூறவில்லை. இதேபோல் தான் சுனி முஸ்லிம் நாடுகளான கத்தார், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளும் நஸ்ரல்லா கொலையானது குறித்து எதுவும் கூறவில்லை. ஏன் சில இடங்களில் கொண்டாடப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

2011ம் ஆண்டில் ஷியா முஸ்லிம் இயக்கத்தை பஹ்ரைன் ஒடுக்கியது. இதற்கு காரணம், பஹ்ரைன் ஷியா முஸ்லிம் நாடாக இருந்தாலும், ஆட்சியாளர்கள் சுனி முஸ்லிம் பிரிவை சேர்ந்தவர்கள் என்பதால் தான். ஆனால், சிரியாவில் மக்கள் சுனி முஸ்லிம்களாகவும், ஆட்சியாளர்கள் ஷியாக்களாகவும் உள்ளனர்.

**லெபனானில் இஸ்ரேலிய படையெடுப்பு:**


1982 இல் லெபனான் மீதான இஸ்ரேலின் முதல் படையெடுப்பு நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து 2006 இல் நடந்த லெபனான் போரில் ஹிஸ்புல்லா படையினர் எல்லை தாண்டி ஊடுருவி கொரில்லா தாக்குதலை நடத்தி இரண்டு இஸ்ரேலிய வீரர்களை பிணையாக பிடித்தனர்; மேலும் மூன்று வீரர்களை கொன்றனர். 34 நாள் போரில் 121 ஹிஷ்புல்லா வீரர்கள் இறந்தனர்.

தரைப் படையெடுப்பில் பல சவால்கள் இருந்தாலும், இதனை போக்கும் வகையில் ஹிஸ்புல்லாவின் பதுங்கு குழிகள் அழிப்பு, நஸ்ரல்லா உள்ளிட்ட அந்த அமைப்பின் முக்கிய தளபதிகள் கொலை, ஆயுதக் கிடங்குகள் அழிப்பு என அடுத்தடுத்த முன்னேற்பாடுகளை செய்துள்ளது இஸ்ரேல்.

முந்தைய படையெடுப்புகளில் நிகழ்ந்த கடும் அழிவின் பாடத்தில் இருந்து இந்த உத்திகளை இஸ்ரேல் தற்போது கையாள்வதாக கூறப்படுகிறது.




'சமூகத்திற்காக போராடுங்கள்.
போராட முடியவில்லை என்றால் எழுதுங்கள்.
எழுத முடியவில்லை என்றால் பேசுங்கள்.
பேச முடியவில்லை என்றால் ஆதரிக்கவும் உதவவும் செய்யுங்கள்.
அதுவும் முடியாது என்றால் ...
உங்கள் பங்கிற்கு, போராடுபவர்களை தடுக்கவோ வீழ்த்தவோ வேண்டாம்.'
-சே குவேரா.





# சக்தி இவள்

கலை

மானிடப் பிறவியின்
மகத்தான அவதாரம்

எத்தனை துயரங்கள்?
எத்தனை வலிகள்?
அத்தனையும் மறந்து
அடுத்த நொடியில்
அவள் இயங்கிடுவாள்!

குடும்ப கோவிலில்
குலதெய்வம் அவள்!
முற்றுப் பெறாத
முடிவிலித் தொடரவள்!

எத்தனை பெயர்கள்?
எத்தனை பட்டங்கள்?
எத்தனை உருவங்கள்?
அத்தனையும் சக்தியே!

மாபெரும் சக்தியாய்
மரணத்தின் விளிம்பில்
உச்சம் தொட்டாலும்
மீண்டும் எழுவாள்!

தொடரியா தோல்வியா
துவண்டு போகாமல்
மீண்டும் மீண்டும்
குடும்ப நலனுக்காய்
துடித்து எழுவாள்!

அவளுக்காய் வாழ
எண்ணியது இல்லை.
வாழ்ந்ததும் இல்லை.
மற்றவருக்காய் உருகும்
அவள் மனதை
யாரும் மதிப்பதில்லை!

வரையறைக்குள் அடங்காத
மாபெரும் சக்தி
பெண் என்பவளே!!

கலை.



பவானி

# இடப்பெயர்வும் நானும்

## பாகம்: 09

ஒவ்வொரு நாளும் எதுவும் யோசிக்க முடியாமல், வாழ்க்கை நகர்ந்தது. தினமும் ஒலிபெருக்கியில் சரணடையும் அறிவிப்பு வந்து கொண்டு தான் இருந்தது. அதைவிட குடும்ப உறவுகள் பிரிந்து வேவெறு இடங்களில் இருப்பதால் அவர்களைத் தேடி ஒலி பரப்பும் செய்யப்பட்டது. ஏனெனில் தேவிபுரத்தில் பேருந்துகளில் ஏற்றும் போது, குடும்பமாக ஏற்றாமல் சிதறி ஏதோ ஆட்டு மந்தையை ஏற்றியது போல ஏற்றியதன் விளைவே இது.

இந்த இடத்தில் நான் சொல்வது உங்களுக்கு புரியும் என்று நம்புகிறேன். நானும் இவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டிருப்பேன். என் சினேகிதியின் அம்மாவின் புத்திசாலித்தனமான செயற்பாட்டாலேயே நாம் இன்று ஒன்றாக இருக்கின்றோம். இல்லையென்றால் நான் என்னவாக இருப்பேன் என்று எனக்கே தெரியாது. இப்படியான செயற்பாடுகள் மூலம் பல குடும்பங்களை UNHCR ஒன்று சேர்த்தது.

இனி முகாம் கதைக்கு வருவோம் இப்போது உங்களுக்கு தண்ணீர் பிரச்சனை பற்றி விளங்கியிருக்கும். சாப்பாடு முதலில் பெரும் பிரச்சனையாக இருந்தது. சமைத்த உணவு எமக்கு பழுதாகியே வந்தது.

பின் ஒரு சில கிழமைகளின் பின் அந்த அந்த யூனிற்றில் உள்ளவர்களுக்கு சமையலறைக்கென ஒரு கொட்டில் போடப்பட்டது. ஒவ்வொரு நாளும், ஒரு வரிசையில் உள்ளவர்கள் சமைக்கலாம் எனும் நடை முறை சிறிது காலத்தின் பின் வந்தது. எமக்கு தேவையான சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டன நிவாரணப் பொருட்கள் தரப்பட்டன. ஏதோ சமாளித்தோம்.

நிவாரணங்கள், உடுபுடவைகள், சமையல் உபகரணங்கள் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டன. எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டோம். ஒவ்வொரு தேவைக்காகவும் ஒவ்வொரு இடம் அலைய வேண்டியிருந்தது. எம்மிடம் உள்ள வீட்டிலே போட்டிருக்கும் அதே உடுப்புக்கு மேலாக ஒரு துவாய் துண்டை போட்டபடியே வெளியில் சென்றோம்.

யாரையும் பார்ப்பதற்கு அனுமதியில்லை. திறந்தவெளிச் சிறைச் சாலையில் அகப்பட்டவர்கள் போல அலைந்து திரிந்தோம். 2009 மே 18 தலைவர் இறந்து விட்டதாக கூறி பட்டாசு வெடியுடன் பால் சோறும் பரிமாறப்பட்டு ,பொம்மலாட்டம், காபரே நடனம், களியாட்டம் என பலவிதமாக கூத்தடித்தார்கள்.

நாங்கள் அதில் கலந்து கொள்ளவில்லை. 'சி.ஐ.டி வந்து பார்த்தால் பிரச்சனை வரும் போவம்' என்று பல பேர் போனார்கள். நாங்கள் போகவில்லை.



எனது மகனுக்கு பேச்சு வரவில்லை. மிகவும் சிக்கலான வாழ்க்கை. நிம்மதியற்று, ஓடி ஓடி வீட்டுக்காக வேண்டியதை பார்க்க வேண்டிய நிலையில் நான் இருந்தேன்.

வைத்திய சேவை பற்றி சொல்லியே ஆக வேண்டும். காய்ச்சல் வேறு வருத்தங்கள் வந்தால் கூட அங்கு நாம் பனடோலுக்கு கூட வழியில்லாமல் இருந்தோம்.



பின்னாளில் முகாம்களுக்கான மருத்துவ வசதியென ஓரிடத்தில் அமைக்கப்பட்டு நோயாளிகளை பார்த்தார்கள்.

அதாவது காலை 10 மண் தொடக்கம் பின்னேரம் 3 மணி வரை நோயாளர்கள் பார்க்கப்பட்டார்கள். அது எப்படி இருக்கும் என எண்ணிப் பாருங்கள். ஏனெனில் அருணாச்சல முகாம் என்பது நிறைய யூனிற்றுக்களைக் கொண்டது. ஒரு 50,000 மக்களுக்கு மேலாக உள்ள இடத்தில ஒரேயொரு மருத்துவ முகாம்.

அவசர நோயாளர்களைக் கூட பார்க்க முடியாத சூழல். எம்மை ஒரு மனிதப் பிறவியாக கூட நினைக்கவில்லை. எவ்வளவு தூரம் எம்மைக் கொடுமைப் படுத்த முடியுமோ அவ்வளவு செய்தார்கள். சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்தோம். இந்த முகாமில் நிறைய பொதுமக்கள் மருத்துவ வசதியின்றி இறந்தனர். பிள்ளைகள், முதியவர், இளையவர்கள் என்ற பாகுபாடின்றி அநேகமானோர் இறந்து போயினர்.

இறந்தவர்கள் உடலை கூட நாம் மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே தகனம் செய்தோம். நொந்து நூலாகி போய் வந்த நாம் மீண்டும் மீண்டும் துன்பத்தையே சந்தித்தோம்

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல' இப்போது நினைக்கும் போது அட இவ்வளவு கஷ்டங்களையா அனுபவித்தோம் என மனது பிரமித்து போய்விடுகிறது.

இறந்து போன பின்பு சொர்க்கம், நரகம் என்பன தீர்மானிக்கப் படுவதாக சொல்லுவார்கள். 2009 யுத்த மௌனிப்பின் பின் நாம் அகதி முகாம்களில் நரகத்தை கண்டோம். அனுபவித்தோம்.

இங்கு வருத்தமாக உள்ள நோயாளர்களை விடியற் காலையிலேயே வரச் சொல்லுவார்கள், நோயாளர் தொகை அதிகம் என்றபடியால் இரவே அந்த குளிரிலும், பனியிலும், இருட்டிலும் வரிசையில் போய் நின்றுவிடுவார்கள்.

அப்போது தான் விடிய மருத்துவரிடம் காட்டி மருந்தெடுக்க இலகுவாக இருக்கும். இங்கு வரும் மருத்துவர்கள் அனைவரும் சிங்கள இனத்தவர்களே. அவர்களில் சிலரைத் தவிர மற்றவர்கள் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டார்கள். எனினும் அங்கு ஒழுங்கு படுத்த நியமிக்கப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள் மிகவும் கேவலமாகவே மக்களை நடாத்தினார்கள்.

பகலில் மருத்துவ சேவை உண்டு. இரவில் இல்லை. அப்படி ஏதும் அவசரமென்றால் அங்கு கடமையிலிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தரிடம் சொல்லலாம். அவர்கள் அம்புலன்ஸ் சேவை மூலம் செட்டிக்குளம், வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்படுவார்கள்.

இரவு நேரத்தில் அநேகமாக அம்புலன்ஸ் வண்டி நிற்கும். முகாமில் வரிசை கட்டி மருந்தெடுப்பது என்பது குதிரைக் கொம்பு போல. மருத்துவ வசதியைப் பெறுவது கூட மிகவும் கஷ்டமாக இருந்தது.

ஒரு நாள் எனது மகளுக்கு வயிற்று குத்து வந்துவிட்டது. இடம் பெயர முதலே அவளுக்கு வயிற்று குத்து உண்டு. கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையிலேயே இடப் பெயர்வு ஏற்பட்டது. இடையில் நாம் நிறைய சிரமப்பட்டோம். பின் அடிக்கடி வரும் எதாவது செய்து சமாளித்து விடுவேன். ஆனால் இன்று எதுவும் செய்ய முடியாமல் புழுப்போல வயிற்றை பிடித்து கத்தி அழுதாள் அவள்.

அயலிலுள்ளவர்கள் துணையுடன் இரவு என்பதால் அம்புலன்ஸ் நிற்கும் இடத்திற்கு சென்றோம். அங்கு காவலில் நின்ற பொலீசார் எனது நிலையைப் பார்த்து உடனேயே



அம்புலன்சில் ஏற்றி அனுப்பி விட்டார்கள். போட்டது போட்ட படி விட்டு விட்டு நான் மகளுடன் வந்து விட்டேன். செட்டிகுளம் ஆதாரவைத்திய சாலைக்கு வந்து விட்டோம். உடனேயே ஏதோ கொடுத்து மகளை தூங்க வைத்து விட்டார்கள். விடியே எக்ஸ்ட்ரே எடுக்கலாம் என்று சொன்னார்கள்.

நான் என் வாழ்க்கையை நினைத்து மனது உடைந்து அழத் தொடங்கி விட்டேன் அப்போது அருகில் வந்த ஒரு தாதி 'அழ வேண்டாம். இது பெரிதாக இருக்காது. கவலைப்படாதீங்க. உங்கட சொந்தக்காரர் யாராவது இருக்கிறார்களா? தொலைபேசி இலக்கம் தெரிந்தால் பேசுங்கள்' என்று தனது கையடக்க தொலைபேசியை தந்தார். கடவுள் ஏதோ ஒரு உருவம் எடுத்து அல்லல் படும் அபலைக்கு ஆறுதல் தருவது போலவே என் கண்ணுக்கு அது இருந்தது.

எனது தங்கையின் தொலைபேசி எண் மட்டுமே எனக்கு தெரியும் என்று சொன்னேன். எனது தங்கையும் உடனே எடுத்து, எனது குரலைக் கேட்டதும் பதறிப் போனார். நான் விடயத்தை கூறியதும் 'கவலைப்படாதே!

விடிய ஒரு அக்கா உன்னை வந்து பார்த்து எல்லாவித உதவியும் செய்வா என்று கூறினார். நான் இருந்த விடுதி எண்ணை கூறி விட்டு, மகளுக்கு பக்கத்தில் போய் இருந்தேன்.

தூக்கம் வரவில்லை. விடிந்தது. மகள் எதுவும் நடக்காது போல சாதாரணமாக எழுப்பினாள். அங்கு வைத்தியசாலையில் பணியாற்றிய பணியாளர்கள் எம் மீது மிகுந்த அக்கறை காட்டி, பரிவுடன் செயற்பட்டனர். பின் என் தங்கை கூறிய உறவினர் சாப்பாடு, காசு, உடுப்பு என்பனவற்றை கொண்டு வந்து தந்தார்.

நாம் அங்கு 3 நாட்கள் தங்கி சிகிச்சை பெற்றோம். நாம் மீண்டும் முகாம் திரும்பினோம். எறிகணை, கிபிர் தாக்குதலில் அதிர்ச்சிகள் என் மகளை மனரீதியாக பாதித்ததன் விளைவே இது எனவும், மிகவும் மன ரீதியாக தன்னம்பிக்கை கொடுத்து, கூடுதல் கவனம் செலுத்தி பார்க்கும் படியும் கூறினார்கள்.

அவர்களின் அறிவுரை கேட்டு அதன்படி செய்வதாக உறுதி கூறி முகாமுக்கு திரும்பினோம். முகாமில் ஒவ்வொரு விஷயத்திற்கும் அலைந்து திரிவதே வேலை. இதில் யார் யாருக்கு அக்கறை காட்டுவது. இவ்வாறு? எல்லாவற்றுக்கும் மிகவும் சிரமமே. வாய் பேச முடியாத மகனை என்ன செய்வது? மகளை என்ன செய்வது? என்ற சிந்தனையில் முகாமில் எனது கொட்டிலுக்கு வந்த போது, எனது 2 பவுன் சங்கிலி, காப்பு, காசு என்பன களவு போய்விட்டது தெரிந்தது. சத்தியமாக என்னால் இதனை தாங்க முடியவில்லை. கதறி அழுது விட்டேன். கஷ்டப்பட்டு சேர்த்து இடப்பெயர்வில் மிஞ்சியது அதுவே. அப்போது நான் நினைத்தேன். எவ்வளவு பேர் குடும்பம் குடும்பமாக எறிகணை வீச்சில் இறந்தார்கள்? எனக்கு மட்டும் ஏன் அப்படி நடக்கவில்லை?

நடந்திருந்தால் கவலையற்று போயிருப்போம். ஒரு பெண் தனித்து நின்று போராடிப் பார்த்தால் உண்மையில் வலி தெரியும். ஆண்டுகள் பல கடந்த போதும் என்னால் இதை இன்று வரை மறக்க முடியவில்லை.

அக்காவின் மகன் வந்து 'அன்ரி! காசு தானே போனது உழைக்கலாம் விடுங்க' என்ற போது எனக்கு உண்மையாவே மிகவும் ஆறுதலாக இருந்தது. நான் உடைந்து அழுதாலும் எனக்குள் இருக்கும் வைராக்கியம் என்னைத் தேற்றி எழுப்பியது.

மருத்துவச் சீர்கேடுகள் இவ்வாறு இருக்க, எமது முகாம் பொறுப்பதிகாரி பற்றி கூற வேண்டும். அவர் 2009 சண்டைகளின் போது கோணாவில் பகுதியில் கால் ஒன்றை இழந்து விட்டதாகவும், அதனால் தமிழர் மீது கொலை வெறியோடு இருப்பதாகவும் கதை உண்டு. அவரது மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டாலே எவரும் பாதையில் குறுக்கே நிற்பதில்லை.

அப்படி அவனது கண்ணில் யாரும் தட்டுப்பட்டால் அன்று தட்டுப்பட்டவர் பாடு திண்டாட்டம் தான். அடித்து விடுவான். 'தெமழு பன்றி' என்று ஏதோ சொல்லி அடிப்பான். இதனால் யாருமே அவன் வரும் போது பெரும்பாலும் நிற்பதில்லை.



அப்படியான ஒரு அடிமை சீவியம். அங்கே 2009 மே மாத 18 இற்கு பின் எமக்கு பக்கத்திலுள்ள முகாமான இராமநாத முகாமில் முள்ளிவாய்க்காலில் இருந்து கொண்டு வந்த மக்களை வைத்திருந்தார்கள். நாம் அங்கு சென்று பார்க்க முடியாது .

ஏனெனில் இடையில் நீண்ட கம்பி வேலி போட்டிருந்தார்கள். அதனுள் புகுந்து சென்று பார்ப்பது மிகவும் கடினமான செயல். எனினும் நாம் யார்? கடுகு நுழைய முடியாத இடத்திலும் புகுந்து வெளிவரும் திறமை படைத்தவர்கள். ஒரு நாள் வேலிக்குள்ளால் நுழைந்து போய் விட்டோம். ஆனால் கால் வைக்க முடியாதளவுக்கு மலங்கள் வெட்டை வெளியில் கழிக்கப்பட்டிருந்தன.

திடிரென மக்கள் வந்தமையால் அவர்களால் விரைவாக மலசலகூட வசதிகள், ஏனைய வசதிகள் செய்வது கடினமாக இருந்தது போல. நாம் எம் உறவினர்கள் யாராவது வந்துள்ளார்களா என பார்த்து திரும்பி பிடிபடாமல் விட்டோம். அதன் பின் வாழ்க்கை தன் போக்கில் நகர்ந்து கொண்டிருந்தது. இதற்குள் நாம் நமது கொட்டில்களில் சமைக்க தொடங்கினோம் பார்க்க வருபவர்கள் வேலிக்கு வெளிப்புறம் உட்புறமாக நின்று பார்க்க முடிந்தது. அவர்கள் தேவையான பொருட்கள் சிலவற்றை தருவார்கள் எல்லாம் இராணுவ கண்காணிப்பிலே நடை பெறும்.

வெளியில் இருந்து கூட்டுறவுச் சங்கத்தின் பாரவூர்தி மூலம் சாமான் கொண்டு வந்து விற்றார்கள். நாம் வரிசையில் நின்று காசு கொடுத்து வாங்குவோம் ஒரு நாள் ஐஸ்கிறிம் வாகனம் வந்தது. எனது மகன் ஓடிச் சென்று ரூபா 1000 க்கு வாங்கி வந்தார். ஏசுவதற்கு மனம் ஏவிய போதும் சூழ்நிலை தடுத்து விட்டது. ரூபா 1000 விட அவன் முகத்தில் மலர்ந்த சந்தோஷம் ஆறுதலாக இருந்தது. அதே சமயத்தில் சிறு கூட்டுறவு கடைகள் முகாமினுள்ளும் முளைத்து விட்டன.

வெற்றிலையில் ஒரு அம்மா சாத்திரம் சொல்வதாக சொன்னார்கள். நான் வெற்றிலையுடன் மகனை கூட்டிச் சென்றேன். என் வெற்றிலையை பார்த்து திருப்தியடைந்ததாக கூறி மகனுக்கு தேங்காய் சுற்றி ஏதோ செய்து தலையில் தட்டி திரும்பிப் பார்க்காமல் கூட்டி போகும் படி சொன்னார். என்ன ஆச்சரியம்! எனது மகன் தெளிவடைந்த முகத்துடன் முன்பு போல பேசத் தொடங்கி விட்டான்.

இதை வாசிக்கும் யாராவது இது என்ன மூடநம்பிக்கை என எண்ணலாம். ஆனால் இது சத்தியமாக நடந்த உண்மை. என் வேதனையை கடவுள் கேட்டு ஏதோ ரூபத்தில் வந்து உதவினார். இதுதான் உண்மை.

என்னோடு சங்கத்தில் பணியாற்றிய பணியாளர்கள் பலர் இராமநாதன் முகாமிலும், அருணாச்சல முகாமில் சிலரும், ஆனந்தகுமாரசாமி முகாமில் சிலரும் இருந்தார்கள். எனவே இராமநாதன் முகாமில் எமது சங்கத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்து நடைபெற்றன. நாமும் வேலைக்கு போகலாம். ஆனால் பெரிய பிரச்சனை வேலி தாண்டுவது. அது பற்றி அடுத்த தொடரில் கூறுகிறேன். எனது இத் தொடர் பற்றிய உங்கள் விமர்சனங்களை எதிர் பார்க்கின்றேன்.

தொடரும்...

# வனைவு

கொற்றவை

அங்கம்: 25

ஆனந்தனுக்கு வெண்ணிலாவை எண்ணி பெருமிதம் தாங்க முடியவில்லை. என்ன தெளிவாக சிந்திக்கிறாள்? தற்போதைய நாட்டு நடப்பு பற்றி எவ்வளவு சரியாக தெரிந்து வைத்திருக்கிறாள்? இந்தக் காலத்துப் பிள்ளைகள் போதைவஸ்து, குடி, காதல், ஒன்லைன் சீரழிவுகள் என்று தவறான வழிகளில் செல்வதைப் பார்த்து எவ்வளவு மனம் வருந்தியிருக்கிறான் ஆனந்தன்? சில சமயங்களில் கண்ணுக்கு முன்னால் நடக்கும் தவறுகளைக்கூட தட்டிக் கேட்க அதிகாரமில்லாத கையறு நிலையில் இருப்பது அவனை வருத்தியிருக்கிறது.

இன்னொரு பக்கத்தில் மாணவர்களின் ஒரு பகுதியினர் தங்களுக்குள்ளேயே ஆரோக்கியமான விவாதங்களை வைத்து ஒரு தீர்க்கமான முடிவெடுக்கும் வல்லமையுடன் இருக்கிறார்கள். பெருமையாக இருந்த அதே சமயம் வெண்ணிலா சட்டத்தரணியாகப் போவதாகச் சொன்னதும் கொஞ்சம் பயமாகவும் இருந்தது. ஊழல் நிறைந்த இந்த உலகத்தில் இளம் சட்டத்தரணியாக அரசியலில் புகுந்து இவளால் சாதிக்க முடியுமா?

அவனின் மனநிலைதான் இப்படி இருந்தது என்றால் சாந்தியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். வெண்ணிலா உறங்கும்வரைதான் அவள் காத்திருந்தாள். அதற்குப்பிறகு ஆரம்பித்து விட்டாள். இரவு முழுவதும் மகளைப் பற்றி தொணதொணவென்று பேசிக்கொண்டே இருந்தாள். மகள் மீது அவளுக்கிருந்த அன்பும், பாசமும் ஆனந்தனை நெகிழ்ச்சியடைய வைத்தன.





நள்ளிரவுக்குப் பின்னர்தான் கண்ணயர்ந்தான் ஆனந்தன். விடிகாலையில் வீட்டுவாசலில் நின்று கூக்குரலிட்ட சிவப்பி சேவலின் சத்தம் அவனை எழுப்பி விட்டது. நல்லதுதான். இன்றைக்கு அவன் நேரத்துக்கே வேலைக்குப் போக வேண்டியிருந்தது. மற்றவர்களை எழுப்பி விடாமல் மெதுவாக எழுந்து வெளியில் வந்தான் ஆனந்தன். அவன் போகுமிடம் எல்லாம் காலைச் சுற்றிச்சுற்றி வந்தது சிவப்பி சேவல். இதற்குக்கூட தன்னுடைய வீட்டவர்கள் யார் என்று தெரிந்திருக்கிறது.

பாலைக் கறந்த பின்னர் ஆட்டுக்குட்டியை அவிழ்த்து விட்டான் அவன். ஆட்டுக்குட்டி முட்டி முட்டிப் பாலைக் குடித்த திருப்தியில் துள்ளி விளையாடத் தொடங்கியது. மீதமிருந்த புல்லை எடுத்து ஆட்டுக்குப் போட்டவன் எல்லோருக்குமான காலைத் தேநீரைத் தயாரித்தான். சாந்திக்கும் வெண்ணிலாவுக்குமான தேநீரை சுடுநீர்ப் போத்தலில் ஊற்றி வைத்துவிட்டு, வெளியில் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து தன்னுடைய தேநீரை ரசித்துக் குடித்தான்.

இவ்வளவு நேரமும் சாந்தியோ வெண்ணிலாவோ எழும்பவில்லை. அடித்துப் போட்டதுபோல அசந்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

''பாவம்...! இன்னும் கொஞ்ச நேரம் உறங்கட்டும்..''

மேசையில் இருந்த ஒரு துண்டுப் பேப்பரில் தான் வேலைக்குப் போவதையும் தேநீர் தயாராக இருப்பதையும் எழுதி வைத்து விட்டு சைக்கிளை எடுத்தான் ஆனந்தன்.



அப்போதுதான் பொழுது பலபலவென்று விடியத் தொடங்கியிருந்தது.

காலையிலேயே களஞ்சியத்தைத் திறந்து பொருட்களை அடுக்குவது, கடைகளுக்குத் தரம்பிரித்துக் கொடுப்பது, துப்பரவுப் பணி செய்வது என்று வேலைக்கு வரும் அத்தனை பேரையும் மேற்பார்வை செய்வதும் அவனுடைய வேலை என்று ஏற்கனவே மண்டிக்காரர் சொல்லியிருந்தார். களஞ்சியத்தின் திறப்பையும் அவனிடமே கொடுத்திருந்தார்.

முன்பானால் அப்படிக் கொடுக்க மாட்டார். ஆனந்தன் சமுசயப்பட்ட மாதிரி ஏதாவது சட்டத்துக்குப் புறம்பான பொருட்களும் களஞ்சியத்தில் இருந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவரின் நண்பரான அந்த கேடுகெட்ட கட்சிக்காரரின் கை ஓங்கியிருந்ததே. போதாக்குறைக்கு ஊழலிலேயே உழன்று கொண்டிருந்த முந்திய அரசின் எடுபிடிகளாகவும் இவர்கள் இருந்திருக்கிறார்கள்.

பலவிதமான யோசனைகளுடன் சைக்கிளை உழக்கினான் ஆனந்தன். காலைப்பொழுது ரம்மியமாக இருந்தது. தெருவில் இப்போதுதான் அங்கொருவர் இங்கொருவராக ஆட்கள் நடமாடத் தொடங்கியிருந்தனர். இப்போது காணக் கிடைக்காத அரிய காட்சியாக, கிடுகுகள் ஏற்றப்பட்ட மாட்டுவண்டில் ஒன்று அவனைக் கடந்து போனது. 'ஜல் ஜல்' என்று கழுத்தில் கட்டப்பட்ட மணிகள் கிணுகிணுக்க இளம் காளை மாடுகள் கம்பீரமாக நடந்து போனது பார்க்கவே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அந்தக் காலை வேளையிலும் நாய் ஒன்று அவனைத் துரத்தத் தயாராக நிற்பதை தூரத்திலிருந்தே பார்த்த ஆனந்தன் எச்சரிக்கையானான். சற்று தூரத்திலேயே சைக்கிளால் இறங்கி அதை உருட்டியபடி வந்தவனை போனால் போகட்டும் என்று விட்டுவிட்டு எதிர்த்திசையில் மோட்டார் சைக்கிளில் வரும் ஒருவனைத் துரத்தத் தயாராக நின்றது அந்த நாய்.

ஆனந்தன் களஞ்சியத்திற்கு வந்தபோது வேலையாட்கள் மூவர் ஏற்கனவே அங்கு காத்துக்கொண்டிருந்தனர்.

''ஐயையோ...! நாம்தான் பிந்தி வந்து விட்டோமோ...?'' என்றிருந்தது ஆனந்தனுக்கு.

''இப்போதான் வந்தனாங்கள் அண்ணா...!'' என்றார்கள் அவர்கள்.

களஞ்சியத்தின் உள்ளே பொருட்கள் நிறைந்து கிடந்தன. பொருட்களை இறக்கியவர்கள் கண்டமேனிக்கு இறக்கியிருந்தனர். எந்த ஒழுங்கும் இல்லாமல் அங்குமிங்குமாக போட்டு வைத்திருந்தனர். மண்டிக்காரர் வசம் நிறைய கடைகள் இருந்ததால் ஏராளமான பொருட்கள் களஞ்சியத்தினுள் இருந்தன. இன்றைக்கு இடுப்பு எலும்பு உடையும்வரை வேலை இருக்கப் போகிறது.

வேலையாட்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். ஒவ்வொரு கடைக்கும் போகவேண்டிய பொருட்கள் அனைத்தையும் பார்த்துப் பார்த்து எடுத்து வாகனங்களில் ஏற்றியாகிவிட்டது. வேலையாட்கள் அனைவரும் தேநீர் இடைவேளைக்குப் போய்விட்டனர். ஆனந்தன் மட்டும் யோசனையில் இருந்தான்.

இன்றைக்கு அவனுக்குரிய வேலை இங்கு முடிந்து விட்டதுதான். ஆனாலும் இங்கு சிதறிக்கிடக்கும் பொருட்களை அப்படியே விட்டுவிட்டுப் போனால் பிறகும் அவன்தான் கஷ்டப்பட வேண்டும். வேலையாட்கள் இருவரை மட்டும் துணையாக வைத்துக்கொண்டு அனைத்தையும் ஒழுங்குபடுத்தி முடித்தபோது அப்பாடா என்றிருந்தது.

அடுத்த வேலை தொடங்குவதற்கு இன்னும் நாற்பது நாற்பத்தைந்து நிமிடங்கள் இருந்தன. பக்கத்திலிருந்த கடையில் வடையும் தேநீரும் அருந்தியபோது சாந்திதான் அவன் ஞாபகத்தில் இருந்தாள். அவன் கடைச்சாப்பாடு சாப்பிடுவதற்கு உடன்படாதவள் அவள்.

மருந்துக் கடைகளுக்கு மருந்துகள் விநியோகம் செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. இங்கு அவன் ஒரு பொறுப்பான ஒரு வாகனச் சாரதி மட்டும்தான். மருந்துகள் அவன் வாகனத்தில் ஏற்றப்பட்டிருக்கும். எங்கெங்கு என்னென்ன இறக்க வேண்டும் என்று பார்த்து இறக்கி கையெழுத்து வாங்கினால் சரி.

வாகனத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டபோது வீதி வாகனங்களால் நிறைந்திருந்தது. ஊர்ந்து ஊர்ந்து போய் பொருட்களை இறக்கி முடிப்பதற்குள் போதும்போதுமென்று ஆகி விட்டது. இரண்டு மூன்று நாட்களுக்கு தொடர்ந்து வேலை இருப்பதால் வாகனம் அவனிடமே இருக்கட்டும் என்றுவிட்டார் மண்டிக்காரர்.

வாகனங்களின் இரைச்சலில் ஃபோன் மணியடித்தது கேட்கவில்லை. வழியில் பழங்கள் கொஞ்சம் வாங்கலாம் என்று கடைக்குள் நின்றபோது மணியடித்தது. பார்த்தால்.... சாந்தி.

''கடைக்குள்ள நிக்கிறன். என்னவும் வாங்கோணுமோ?''

அவனை இடைமறித்தாள் சாந்தி.

''ஒண்டும் வேண்டாம்... உங்களுக்கு எத்தினை தரம் எடுக்கிறது? ஒரு ஆத்திர அவசரத்துக்கு எடுக்க மாட்டன் என்னுறியள்....''

இது வழமைக்கு மாறாக இருந்தது. சாந்தி அவனிடம் இப்படியொரு தொனியில் பேசியதே இல்லை. அவனை பதற்றம் தொற்றிக் கொண்டது.

''ஏன்...? என்ன ஆச்சு....? நீயும் பிள்ளையும் ஓக்கேதானே....? அப்ப என்ன...?''

''எங்களுக்கு ஒண்டுமில்லை... நாங்கள் இங்கை... காவேரி வீட்டுப்பக்கம் வந்தனாங்கள்... சும்மாதான் வந்தது இங்க வெங்கி அண்ணைக்கு ரெண்டு நாளா காய்ச்சலாம்... மருந்து எடுத்திருக்கிறார்... திடீரெண்டு ஆளைப் பாக்க ஒரு மாதிரிக் கிடக்கு... எனக்கு பயமாக் கிடக்கப்பா. ஒருக்கா உடனை வாங்கோ....''

''இந்தா... இப்பவே வாறன்'' என்றவன் பழத்திற்கான காசை கொடுத்துவிட்டு அவசர அவசரமாக வாகனத்தில் ஏறினான். கொஞ்சம் யோசனையாக இருந்தது. சாந்தி பக்குவப்பட்டவள். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று எதையும்



பேசிவிட மாட்டாள். அதிலும் அவன் வாகனம் ஓடுகிறான் என்று தெரியும். அப்படியிருக்க அவன் பதட்டப்படும்படி எந்தத் தகவலும் சொல்லமாட்டாள். இன்று கொஞ்சம் பதட்டமாக அதிலும் குரல் தழதழக்க பேசியது அவனுக்கு கவலையாக இருந்தது.

அவன் அங்கு போக ஒரு மணித்தியாலத்துக்குக் கிட்ட ஆகி விட்டது. வெங்கி படுத்திருந்தான். விளக்கு வெளிச்சத்தில் அவன் சாம்பல் பூத்த நிறத்தில் இருந்தான்.

''வாடா மச்சான்...! சாதாரண காய்ச்சல்தான்... இது கள்தான் பயப்பிடுதுகள்...'' அவனால் பேசக்கூட முடிய வில்லை. சரியாக சோர்ந்து போயிருந்தான்.

ஆனந்தனுக்கும் எதுவும் சரியாகப் படவில்லை.

''மச்சான்...! நல்ல வேளையா வான் கொணர்ந்திருக் கிறன்... வா....! எனக்காக என்ரை திருப்திக்காக ஒருக்கா டொக்டரட்டை போய் வருவம். தங்கச்சி...! நீயும் வா...!''

மறுபேச்சுப் பேச ஆனந்தன் இடம் கொடுக்கவில்லை. வைத்தியசாலையில் அந்த நேரத்திலும் கூட்டமாக இருந் தது. காத்திருக்கும் நேரத்தில் இருக்கவே சிரமப்பட்டான் வெங்கி. அவனுடைய முறை வந்தது. டொக்டர் எல்லா விதமான பரிசோதனைகளும் செய்தார். யோசனையோடு நெற்றியைச் சுருக்கியபடி உட்கார்ந்திருந்த அவரைப் பார்க் கவே பயமாக இருந்தது.

''டொக்டர்... ஏதும் பிரச்சனையோ...? அவன் இருக்க ஏலாமல் கஷ்டப்படுறான்....''

டொக்டர் தாதியை அழைத்து வெங்கியை சிறுநீர் பரிசோ தனைக்கு உட்படுத்தச் சொன்னார். அரை மணி நேரத்தில் முடிவுகள் வந்துவிட்டன. வெங்கி மஞ்சள் காமாளை நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாக டொக்டர் சொன்னர். அதுவும் கடுமையாக.

வெங்கி உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டான். காவேரியை ஆறுதல்படுத்தி வீட்டில் கொண் டுவந்து விட்டான் ஆனந்தன். இதற்கிடையில் அவர்களுக் கான சாப்பாட்டை தயார் செய்திருந்தாள் சாந்தி. கொஞ்ச நேரம் இருந்து காவேரிக்கும் பிள்ளைகளுக்கும் ஆறுதல் கூறிவிட்டு மறுநாள் காலை வருவதாகக் கூறி விடைபெற் றார்கள் அவர்கள்.

மறுநாள் வைத்தியசாலையில் வெங்கியின் நிலைமை மோசமடைந்திருப்பதாக சொன்னார்கள். காவேரியை அங்கு தங்க அனுமதித்திருந்தார்கள். இதனால், பிள்ளை களை தன்னுடன் வீட்டுக்கு கூட்டிவந்து விட்டான் ஆனந் தன். அவர்கள் சோர்த்துபோய் இருந்தார்கள். தங்களுடைய பெரியப்பாவிற்கு ஏதாவது நடந்து விடுமோ என்ற அச்சம் அவர்கள் மனதை வாட்டியது. எவ்வளவு உற்சாகப்ப டுத்தியும் அவர்களின் மனநிலை மாறவில்லை.

எல்லா வேலைகளையும் போட்டது போட்டபடி விட்டு விட்டு ஆஸ்பத்திரியும் வீடுமாக அலைந்தான் ஆனந்தன். பிள்ளைகளும், சாந்தி, வெண்ணிலாவும்கூட வெங்கியை வந்து பார்த்தார்கள். பிள்ளைகளைப் பார்த்ததும் வெங்கி யின் முகத்தில் சற்று தெளிவு பிறந்தது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியே புத்திமதிகள் சொன்னான்.

நன்றாகப் படிக்க வேண்டும், அம்மாவை கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றவன் முக்கியமாக ஒரு நல்ல மனிதனாக உலகத்தில் வாழ வேண்டும் என்றான். 'நான் சுகமாகி வந்து விடுவேன், ஆனாலும் நீங்கள் எனக்கு வாக்குறுதி தர வேண்டும்' என்று அவன் கேட்டதற்கு அவன் கைமேல் கை வைத்து எல்லோரும் வாக்குறுதியளித்தது மெய் சிலிர்க்க வைத்தது.

ஏதோ சரியில்லாமல் இருப்பதாகத்தான் ஆனந்தனுக்கும் தோன்றியது. சில நேரங்களில் தெளிவாக இருந்தான் வெங்கி. முன்புபோல பகிடிகளை உதிர்த்துத் தள்ளினான். திடீரென்று முடியாமல் போய் கதைக்கவே முடியாமல் தெம் பிழந்து போய்விடுவான். காவேரி அவனை அக்கறையாகப் பார்த்துக் கொண்டாள். அவளும் பயந்து போயிருந்தாள். அதுவும் அவன் சிறுநீர் இப்போது இரத்த நிறத்தில் போகத் தொடங்கியிருந்தது அவளின் பயத்தை அதிகப்படுத்தியி ருந்தது.

இரவு நேரத்தில் ஆனந்தனும் அங்கு தங்குவதற்கு அவர் கள் அனுமதிக்கவில்லை.

''காவேரி! என்ன தேவையெண்டாலும் என்ன நேரமெண் டாலும் ஃபோன் பண்ணு. நான் ஓடி வருவன்...'' வீடு திரும் பினான் ஆனந்தன்.

அங்கு ஒருவரும் ஒழுங்காகச் சாப்பிட்டிருக்கவில்லை. அவனைக் கண்டதும்..,

''மாமா! பெரியப்பாக்கு எப்பிடி இருக்கு? அம்மா அழுகிறாவோ? நானும் நாளைக்கு வரட்டோ...?'' என்று துளைத்து எடுத்து விட்டார்கள் பிள்ளைகள்.

அதிகாலை நான்கு மணியிருக்கும். காவேரியிடமிருந்து அழைப்பு வந்தது.

**தொடரும்...**





# பெண்கள் எழுச்சி நாள்
# அக்டோபர் 10













